
# புதுவிதி
# PUTHU VITHI

விலை 20/=
பக்கங்கள் 24
15 டிசெம்பர் 2018
புதுமை : 03 விதி : 132

‘யாதும் ஊரே! யாவரும் கேளிர்!!’





உரிமையை பெற்றுத் தருமா தமிழ் தேசிய கூட்டமைப்பு?



புள்ளினங்களின் ஓலங்கள் ஏன் நமக்கு கேட்பதில்லை




எங்கள் நிலத்தை காணவில்லை



வன்முறையற்ற சமூகம் நோக்கி...



பொன்னியின் செல்வ
கதையை படமாக
எடுப்பதே தனது கனவு
என சொல்லி வருபவர்
மணிரத்னம்.

விக்ரமை மையமாகக்
கொண்டு விரைவில் இந்த
படத்தை மணிரத்னம்
ஆரம்பிக்கவுள்ளார்.
எனினும் இது தொடர்பி
உத்தியோகபூர்வ தகவல்க
வெளியாகவில்லை.



விஜய் சேதுபதி - த்ரிஷா நடிப்பில் வெளியான படம் '96'. பெருவெற்றி பெற்ற இந்தப் படம் தெலுங்கு, கன்னடத்தில் மீளுருவாகிறது.

தெலுங்கில் நானி, த்ரிஷா ஆகியோர் நடிக்கின்றனர். கன்னடத்தில் '96' படம் '99' எனப் பெயர் மாற்றம் பெற்றுள்ளது.

திருமணத்திற்குப் பின் சினிமாவை விட்டு விலகிய ஜெனிலியா, 'மௌலி' என்ற மராத்திய படத்தில் தன் கணவர் ரித்தேஷ் தேஷ்முக்குடன் ஒரு பாடலுக்கு நடனமாடியுள்ளார்.

சிம்பு நடித்த 'வந்தா ராஜவாதான் வருவேன்' படம் வரும் ஜனவரியில் வெளியாகும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இந்நிலையில் வெங்கட்பிரபு இயக்கத்தில் சிம்பு நடிக்கும் படத்திற்கு மாநாடு எனப் பெயர் வைத்துள்ளனர்.

இதன் படப்பிடிப்பு சிம்புவின் பிறந்தநாளான பெப்ரவரி 3 ஆம் திகதி ஆரம்பமாகிறது.









'வி
'த
'ஸ
நி
ட
நா
'ஐ
ப

15
நய

புதுவிதி
PUTHU VITHI

இனியொரு விதி செய்வோம் - அதை
எந்த நாளும் காப்போம்
தனி ஒருவனுக்கு உணவில்லையெனில்
ஜகத்தினை அழித்திடுவோம்.

புதுமை : 03 | 15 டிசெம்பர் 2018 | விதி : 131

# "புதிய அரசியலமைப்பு வெகு தொலைவில்" மனோ கணேசன் வெளியிட்ட உண்மை



புதிய அரசியலமைப்பு நிறைவேற்றம் என்பது வெகு தொலை விலேயே உள்ளதெனவும் தற்சமயம் நாடாளு மன்றத்தில் சமர்ப்பிக்கப் பட்டு விவாதிக்கப்பட்டது இடைக்கால அறிக்கை மட்டுமே எனவும் நாடாளுமன்ற உறுப்பினரும் தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவருமான மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

மேலும் அவர் தெரிவிக்கையில், புதிய அரசியலமைப்பு நிறைவேற்றப்பட வேண்டுமானால் இரண்டு விடயங்கள் தேவை எனவும் ஒன்று நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு உறுப்பினர்களின் ஆதரவு தேவை எனவும் அதன் பின்பு மக்கள் கருத்தறியும் வாக்கெடுப்பு மூலம் உறுதி செய்யப்பட வேண்டும் எனவும் கூறியிருந்தார்.

ஐக்கிய தேசிய முன்னணி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, மக்கள் விடுதலை முன்னணி என்பன ஆதரவளித்தால் 122 வாக்குகளையே பெற முடியும். புதிய அரசியலமைப்பு மூலம் சமஷ்டி உருவாக்கப்படப் போகிறது எனப் பிரசாரம் செய்யும் மஹிந்த தரப்பினர் எதிராகவே வாக்களிப்பர். எனவே மூன்றில் இரண்டு பெறுவது சாத்தியமில்லை. அடுத்து புதிய அரசியலமைப்பு சர்வஜன வாக்கெடுப்பு மூலமே நிறைவேற்றப்பட வேண்டும் எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் வலியுறுத்தி வரும் நிலையில் அதுவும்கூடச் சாத்தியமில்லை எனவும் அவர் தெரிவித்தார்.

ஆனால் பெப்ரவரி நான்காம் நாளுக்கு முன்பாகப் புதிய அரசியலமைப்பை நிறைவேற்றவுள்ளதாக ரணில் விக்கிரமசிங்க சொல்லியிருப்பதாகவும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ரணிலுக்கு ஆதரவு வழங்கி வருவதாகவும் செய்திகள் வெளிவந்துள்ளன. இந்நிலையில் மனோ கணேசன் உண்மையைப் போட்டு உடைத்தமை ரணில் ஆதரவு அரசியல் வட்டாரங்களில் பெரும் அதிருப்தியை ஏற்படுத்திய போதும் எவரும் அவரின் கூற்றை மறுத்து எதுவும் கூறவில்லை.

இது தொடர்பாக மூத்த தமிழரசுக் கட்சி உறுப்பினர் ஒருவர் "தமிழ்த் தலைமைகளை சிங்களத் தலைவர்கள் ஏமாற்றி விட்டார்கள் ஏமாற்றி விட்டார்கள்" என்று சொல்லிச் சொல்லியே தாங்கள் தமிழ் மக்களை ஏமாற்றுவது இதுதான் முதல் தடவையல்ல என்று விரக்தியுடன் கூறினார்.

**எரியாத அடுப்பிலை சுட்ட பாலப்பம்**
**கரியாய்ப் போச்செண்டு கதை விட்டானாம்**

# கடவுளுக்கே சவால் விடும் ஜனாதிபதி



கடவுளே நேரில் வந்து ரணில் விக்கிரமசிங்கவைப் பிரதமராக நியமிக்கும்படி கட்டளையிட்டாலும் தான் அதை ஏற்றுக் கொள்ளப் போவதில்லை என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன சூளுரைத்துள்ளார். மேலும் அவர் தன்னைச் சந்தித்த ஐக்கிய தேசிய முன்னணி நாடாளுமன்ற உறுப்பினர்களிடம் ரணிலைத் தவிர்ந்த வேறு ஒருவரை பிரதமராக ஐக்கிய தேசிய முன்னணி சிபாரிசு செய்யுமானால் அதைத்தான் பரிசீலிக்கத் தயார் எனவும் கூறியுள்ளார்.

நாடாளுமன்றத்தில் பெரும்பான்மை ஆசனங்களைக் கொண்ட கட்சியினதோ, கூட்டணியினதோ தலைவரையே பிரதமராக நியமிப்பது ஜனநாயக சம்பிரதாயமாகும். அதன்படி ஐ.தே.முன்னணிக்கே நாடாளுமன்றத்தில் அதிக ஆசனங்கள் உள்ளதால் ரணிலே பிரதமராக நியமிக்கப்பட வேண்டும்.

ஒரு கட்சியின் தலைவர் பிரதமராக நியமிக்கப்பட வேண்டிய நிலையில் வேறு ஒருவர் நியமிக்கப்பட்டால் அக்கட்சியின் தலைவராக அவரை ஜனாதிபதி ஏற்றுக் கொண்டுள்ளார் என்பதே அர்த்தம்.

அப்படியானால் ஒரு கட்சியின் தலைமையைக் கட்சிக்கு வெளியே உள்ள ஜனாதிபதி தீர்மானிக்குமளவுக்கு நிறைவேற்று அதிகாரம் இடமளிக்கிறதா என்ற கேள்வி மக்கள் மத்தியில் எழுந்துள்ளது. அதேவேளையில் ஐ.தே.கட்சியும் ரணில் தலைவர் என்பதில் உறுதியாகவே உள்ளது.

இது தொடர்பாக கடவுள் பயத்தில் மெல்ல ஒதுங்கி விட்டதாகப் பொதுமகன் ஒருவர் தெரிவித்தார். ஏனெனில் நிறைவேற்று அதிகாரத்தின்படி கடவுளையே மாற்றி வேறு ஒருவரைக் கடவுளாகப் போட்டு விடுவார்களோ என்று பயப்படுகின்றாராம்.

**கல்லுளி மங்கன் போற வழி**
**காடு மேடெல்லாம் தவிடுபொடி**

# இலங்கையர் என்பதே வெட்கக்கேடு பன்னிப்பிட்டிய விகாரதிபதி ஆவேசம்

இன்று வெளிநாடுகளில் இலங்கையர் என அடையாளப் படுத்துவதே வெட்கப்படுமளவுக்கு இலங்கை அரசியலில் வெறுக்கத்தக்கதும், சிங்கள இனத்தின் பெருமைக்குரிய பண்பாட்டைச் சிதைக்கும் வகையிலுமான சம்பவங்கள் இடம்பெற்று வருகின்றன என பன்னிப்பிட்டிய விகாரதிபதி தர்மபாலனந்த தேரர் ஆவேசமாகத் தன் கண்டனத்தை வெளியிட்டுள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி பன்னிப்பிட்டிய விகாரையில் வழிபாடுகளில் ஈடுபட்ட பின்பு விகாரதிபதியைச் சந்தித்தபோதே தேரர் அவரின் தன் வன்மையான கண்டனத்தைத் தெரிவித்திருந்தார்.

அவர் மேலும், சிங்கள மன்னவனான துட்டகைமுனு போரில் எல்லாளனைத் தோற்கடித்த போதிலும் அவருக்குரிய கௌரவத்தை வழங்கியதாகவும் அவருக்கு சமாதியமைத்து அனைவரும் அஞ்சலி செலுத்த வேண்டுமெனக் கட்டளையிட்டதாகவும் அதன் மூலம் சிங்கள இனத்தின் பண்பாட்டுப் பெருமையை நிலைநிறுத்தியதாகவும் தெரிவித்த அவர், இன்றோ இலங்கையர் என்று வெளிநாடுகளில் சொல்ல வெட்கப்படுமளவுக்கு இலங்கையின் அரசியல்வாதிகள் கேவலமாகச் செயற்பட்டு வருகின்றனர் எனவும் குறிப்பிட்டார்.

மஹிந்த ராஜபக்ஷ அதற்குக் காரணம் சபாநாயகரே எனக் சொல்லிச் சமாளிக்க முயன்றபோதும் விஹாராதிபதி அதை ஏற்க மறுத்து விட்டதாகவும் தெரிய வருகின்றது. வெட்கப்பட வேண்டிய விடயங்களை பெருமைக்குரியவையாகக் காட்டுபவர்கள் முன் இப்படியான கண்டனங்கள் என்ன செய்துவிட முடியும்...?

**அற நனைந்தவனுக்கு**
**கூதலென்ன? குளிரென்ன?**


# கடந்தவார சமூக வலைத்தளங்களில்

பேஸ்புக்கும் ஃபிரிட்ஜும் ஒண்ணு தான்




பிடிச்ச மாதிரி எதுவும் இல்லைனாலும் அடிக்கடி தொறந்து பார்க்க சொல்லும்

வாழ்க்கை குத்துச்சண்டை போன்றது விழுந்த போது தோல்வி அறிவிக்கப்படுவதில்லை.. எழாதபோது அறிவிக்கப்படும்..!



பசியில் வாடியவனுக்குத்தான் தெரியும்



பண்ணும் டீயும் அமிர்தம் என்று

குரங்கில் இருந்து வந்திருப்பான் என்ற நம்பிக்கை இல்லை...




அநேகமாக குரங்கு இனத்தில் இருந்து அடித்துத் துரத்தப்பட்டு வந்திருப்பான் , மனிதன்..!

×வாழ்க்கையில் வெற்றி பெற்ற கதைகளை படிக்காதீர்கள் அவை செய்திகளை மட்டுமே கற்றுத்தரும்..




தோல்வி பெற்ற கதைகளை படியுங்கள் அவை தான் வெற்றிக்கான வழிகளைத் கற்றுத்தரும்.!

கடவுளைப் பார்க்க கோவிலுக்கு வருகின்றான் ஒருவன்..




கோவிலுக்கு வருபவனை கடவுளாய்ப் பார்க்கின்றான் இன்னொருவன்..!







உண்ண முடியாத கடவுளுக்கு ஊட்டுகிறார்கள்.....



உண்ண முடிந்த மனிதனை மறந்துவிட்டு

இல்லாதவன் தானே என்ன செய்வான் என நினைக்காதீர்கள்,




இல்லாதவனுக்கு இழப்பதற்கு எதுமில்லை எதுவும் செய்வான்..!

புதுவிதி
PUTHU VITHI

தொடர்புக்கு:
ஆசிரிய பீடம் : 021 493 7777
விநியோகம் : 021 493 2222
விளம்பரம் : 021 493 1111

107, இராசவீதி,
கோப்பாய் - திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.
puthuvithi@gmail.com

## ஆண்டிகள் கட்டிய மடமும் பாத்தீனிய ஒழிப்பு வாரமும்

உயர் அதிகாரி ஒருவரின் உறவுகளுக்குப் பாத்தீனியத்தால் ஏதாவது இடர் ஏற்பட்டதா? தெரியவில்லை பாத்தீனியம் தொடர்பில் வட மாகாண அதிகாரவர்கம் திடீரென விழித்துக் கொண்டிருக்கிறது. ஐங்கரநேசன் விவசாய அமைச்சராக இருந்தபோது அவர் எடுத்த நடவடிக்கைகள் பல. ஆனாலும் அது தொடர்பில் எதுவித முன்னேற்றமும் காணப்படவில்லை. இறுதியில் அவர் பாத்தீனியத்தைப் பத்து ரூபாவுக்கு வாங்கிக் கூடப் பார்த்தார். அப்படியும் பலனளிக்கவில்லை. பாத்தீனியம் அழிந்தபாடில்லை. ஆனால் அதை ஒழிக்கப் பணம் செலவிடப்படுகின்றது.

தற்போது வட மாகாண விவசாய அமைச்சு பாத்தீனியத்தை அழிக்க வேண்டும் என்று கங்கணம் கட்டிக்கொண்டு களத்தில் இறங்கியிருக்கின்றனர். வடக்கு மாகாண ஆளுநரும் கடந்த வியாழக்கிழமை மாவட்ட செயலகத்தில் நடைபெற்ற கூட்டத்தில் கலந்து கொண்டு பாத்தீனியத்தை ஒழிப்போம் என்று திடசங்கற்பம் பூண்டார். கூட்டத்தைக் கூட்டியவர் அரச அதிபர் வேதநாயகன். வட பகுதியிலுள்ள பல அதிகார ஜம்பவான்களும், பொது நலத் தொண்டர்களும், அரசியல்வாதிகளும் இதில் கலந்து கொண்டனர்.

எதிர்வரும் 17 ஆம் திகதி தொடக்கம் ஒரு வாரம் பாத்தீனிய ஒழிப்பு வாரமாகக் கடைப்பிடிக்கப்பட வேண்டும் எனத் தீர்மானம் எடுக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. இந்திய அமைதிப்படை என்ற சூரர் படை குண்டெறிந்து தமிழ் மக்களைக் கொன்றதோடு நின்றுவிடாது பல காலம் நின்று கொல்ல பாத்தீனியத்தை எமது மண்ணில் விட்டுச் சென்றிருக்கின்றனர். இது ஒரு உயிரியல் ரீதியான போராட்டம் என் வட மாகாணத்திலுள்ள விவசாயி ஒருவர் வருத்தத்துடன் கூறினார்.

1999 ஆம் ஆண்டின் 35ஆம் இலக்கத் தாவரப் பாது காப்புச் சட்டத்தின்படி ஒருவர் தமது விளை நிலங்களில், வீட்டுச் சூழலில், பாத்தீனியத்தை அழிக்கத் தவறும் பட்சத்தில் குற்றமிழைத்தவராகக் கருதப்பட்டு ஆறு மாதங்கள் வரை சிறைவாசமும் 100,000 ரூபா வரை தண்டப் பணமும் அறவிடப்படும் என வட மாகாண - விவசாயமும் கம நல சேவைகள், கால்நடை அபிவிருத்தி, நீர் வழங்கல் மற்றும் சுற்றாடல் அமைச்சு அறிவித்துள்ளது.

பாத்தீனியம் இலங்கையில் ஊடுருவக் காரணமான அயல் நாடான இந்தியாவுக்கு அதை ஒழித்துத் தர வேண்டிய கடமையும் பொறுப்பும் உண்டு. பாத்தீனியம் பரவுவதென்பது வட பகுதித் தமிழ் மக்களோடு தொடர்புபட்ட வாழ்க்கைப் பிரச்சினை. பலாலி விமான நிலையம் வேண்டும், சீமெந்துத் தொழிற்சாலை வேண்டும், கலாசாரக் கட்டடம் கட்ட வேண்டும் என்ற கரிசனை உள்ள இந்திய அரசுக்கு எமது மண்ணில் விதைக்கப்பட்ட பாத்தீனியத்தை ஒழிக்க வேண்டும் என்ற கரிசனை வராதது ஏனோ? தெரியவில்லை

தற்போது தொடங்கப்பட்டுள்ள பாத்தீனியம் அழிப்பு என்ற திருவிழாவை வெற்றிகரமாக நடத்தி முடிக்க அதிகாரிகள் கடந்த வியாழக்கிழமை அரச அதிபருக்கும், ஆளுநருக்கும் முன்னால் ஏற்ற திடசங்கற்பத்தை நிறைவேற்றுவார்களா? இல்லை இதுவும் முன்பைப் போன்று ஆண்டிகள் கூடிக் கட்டிய மடமாகுமா...? பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

'யாதும் ஊரே! யாவரும் கேளிர்!!'

# ஈழத்தின் இறுதிப் போர் சாட்சியாய்...! 31

- வன்னிமகள்
எஸ்.கே.சஞ்சிகா

அதற்காக, நான் அவர்கள் சொல்வதைக் கேட்டு வாயை மூடிக் கொண்டிருக்கவும் விரும்பவில்லை.

'போராளிகளை மட்டுமல்ல எங்களையும் என்ன செய்யப் போறான்களோ தெரியேல்லை. வன்னியில இருந்த எல்லோரும்தானே ஆயுதப்பயிற்சி எடுத்தனாங்கள். கிராமியப்படை, எல்லைப்படை, மாணவர்படை என்று யார்தான் பயிற்சி எடுக்கேல்லை? அப்பிடிப் பார்க்கப்போனால் எல்லோரும் புலிதான். வெற்றிபெற்ற போது வாழ்த்தத் தெரிந்தவர்களுக்கு கஷ்டப்படும் போது தோள் கொடுக்கவும் தெரிந்திருக்கோணும். போராளிகளில் பிழை என்றால் தலைவரிலயும்தான் பிழை" என்றேன்.

இந்தச் சனங்கள் எப்படிப்பட்ட சனங்கள்? போராளிகளைக் குற்றம் சுமத்தும் இவர்கள் தலைவர் மீது குற்றம் சுமத்துவதில்லை. அந்தப் பெண்மணியும் எனது கருத்தை ஏற்றுக் கொள்ளவேயில்லை. 'அண்ணை (தலைவர்) அப்பிடிச்சொல்லியிருக்க மாட்டார்" என்று சொல்லிவிட்டு அமைதியானார். சரணடைந்த போராளிகளைப் பார்க்க மனம் ஏவியதால் பால்குடித்து உறங்கும் குழந்தையை கணவரின் அருகில் கிடத்திவிட்டு அந்த இடத்தை நோக்கி நடக்கத் தொடங்கினேன்.

பனைமரங்களுக்கு அருகில் சரணடைந்த போராளிகளை இராணுவம் இருத்தியிருந்தது. சில பெற்றோர்கள், சகோதரர்கள் தங்கட பிள்ளைகளும் சரணடையுமிடத்தில் உயிரோடு உள்ளார்களா எனப் பார்க்கவும் சரணடைந்திருந்த போராளிகளில் தம் பிள்ளைகளின் நிலையை அறியவும் காத்திருந்தனர்.

சரணடையும் ஆண் போராளிகளினதும் பெண் போராளிகளினதும் முகங்களிலே தங்கள் பிள்ளைகளின் முகங்களைத் தேடும் தாய்மைகள், தந்தையர்கள், உறவுகள் முள்வேலிக்கு இந்தப் பக்கம் பரிதவிப்போடு கண்களால் துலாவிக் கொண்டிருந்தன. நானும் தெரிந்தவர்களைத் தேடினேன். எனது பெரியதாயாரின் மகள் மாலதி படையணியில் வேல்விழி என்ற பெயரோடு இருந்தாள். தேடியது கண்கள்... கிடைக்கவில்லை. ஏமாற்றத்தோடு ஒரு பனை வடலியின் கீழ் இருந்தேன்.

பெரியம்மாவின் மகன் 1990 இல் கோட்டை அடிபாட்டில் வீரச்சாவடைந்திருந்தான். ஒருத்தன் கடற்புலியில் இருந்தான். என்னை இடைக்கிடை பார்க்க செஞ்சோலைக்கு வந்தவன் கடலிலேயே ஒருநாள் காணாமல் போயிருந்தான். எஞ்சியிருந்தவள் இவள் ஒருத்தி மட்டுமே. 1995 இடப்பெயர்வுக் காலத்தில் கிளாலிக் கடற்கரையில் இராணுவத்தின் அகோரத் தாக்குதலில் அவளது பெற்றோர் இறந்திருந்தனர். தப்பிய இவளுக்கு உற்றார் உறவினருடன் இருக்க விரும்பாமல் இயக்கத்துக்குப் போய் வேல்விழியானாள்.

ஒருதடவை கிளிநொச்சி இரணைமடுவில் வைத்து அவளைக் கண்டபோதுதான் பெரியம்மா, பெரியப்பா கடலில் காணாமல்போன அண்ணாவின் நிலைகளைக்கூறி கட்டிப்பிடித்து அழுதாள். எத்தனை காலத்துத் துயரை என்னைக் கண்டபோது சித்தியின் பிள்ளை என்ற உரிமையும் உரித்தும் மனதைக் கிளற போராளி என்பதையும் மறந்து பொத்தி வைத்த துயரச்சிலுவையை மெல்லக் கண்ணீரால் நனைத்தாள்.

நான் ஆசிரியராக உழைக்கும் நிலையில் இருந்ததால் என்னிடம் பணமிருந்தது. என்ன வாங்கித்தர என்று கேட்டதற்கு ஒன்றுமே வேண்டாம் என்றாள்.
விடாப்பிடியாக அவளை வற்புறுத்தியும் வாங்கவில்லை. இருக்குமிடத்தை அறிந்து இரண்டுநாள் கழித்து தெரிந்த போராளிப் பொறுப்பாளர் உதவியோடு வட்டக்கச்சிக்கு மோட்டார் சைக்கிளில் போனோம். அவள் என்னை எதிர்பார்க்கவில்லை. வாங்கிச் சென்ற பொருட்களையும் அவளுக்கு விருப்பமான பச்சை நிற பெட்டிக்கோடிட்ட சேட்டையும் கொடுத்தபோது முகத்தில் அழகான மகிழ்ச்சி.

சிரித்தபடி எனனருகில் இருந்து 'நீ சின்னப்பிள்ளையா இருக்கேக்க உனக்கு ஒன்றுமே தர விரும்பமாட்டன். உனக்கு நினைவிருக்கா?" எனக் கேட்டாள்.

'இல்லை" எனத் தலையசைத்தேன்.

'கள்ளி சித்தி மாதிரியே மறந்தது போல நல்லாவே பாவனை செய்கிறாய்" என என் அன்னையை நினைவு கூர்ந்தாள்.

அம்மாவைப் பற்றி அவள் அதிகம் கதைத்தாள். அம்மாவின் இயல்புகள் அழகானவை. மகிழ்ச்சியாக இருந்தது. அவளுடனேயே அவளுடைய பொறுப்பாளர், என்னை அழைத்துச் சென்ற பொறுப்பாளருடன் நானும் இணைந்து மதிய உணவை அருந்தி விடைபெற்றபோது அவளுடைய நெஞ்சுக்கூட்டை நிரப்பியிருந்த ஆயுதங்கள் எனக்கு பயத்தைத் தந்தது.

தனித்து வந்தபோது 'அக்கா துண்டு கொடுத்திட்டு வந்து என்னோட இரன் " எனக்கேட்டேன்.


'நீ இப்பிடிக் கதைத்தால் இனி என்னைப் பார்க்க வரக்கூடாது " என்று உறுமினாள். இனி இதுபற்றி அவளிடம் கேட்கக்கூடாதென முடிவு செய்தேன்.

இறுதிப்போர் உக்கிரமாகி தர்மபுரம் நெத்தலியாற்றடியில் இருந்தபோது விசுவமடுச் சந்தையில் அவளைக் கண்டேன். வயிற்றில் காயமடைந்து மெல்ல மெல்ல நடந்து வந்து கொண்டிருந்தாள். அவளோடு வந்த தோழிப் போராளி தெரிந்தவர் யாரையோ கண்டு கதைத்துக் கொண்டிருந்ததாள். அக்காவுடன் நானும் கதைக்க வசதியாயிற்று.

(சாட்சியம் நீளும்)

# உரிமையை பெற்றுத் தருமா...? தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு

■ யோகநாராயணன்



**ஒரு** நள்ளிரவில் வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தல் மூலம் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனாவால் ரணில் விக்கிரமசிங்க பிரதமர் பதவியிலிருந்து தூக்கி வீசப்பட்டதும் சில மணி நேரத்தில் மஹிந்த ராஜபக்ஷ பிரதமராக நியமிக்கப்பட்டதும் என ஆரம்பிக்கப்பட்ட தென்னிலங்கை அரசியல் குழப்பங்கள் இன்றுவரை பரபரப்புக் குறையாமல் தொடர்ந்து கொண்டிருக்கின்றன. புதிய அமைச்சரவை நியமனம் அடுத்தகட்டமாக ஜனாதிபதியால் மேற்கொள்ளப்பட்டது. பிரதமர், அமைச்சரவை ஆகியவற்றின் நியமனம் செல்லுபடியாகாது எனத் தீர்ப்பளிக்கக் கோரி நீதிமன்றில் சமர்ப்பிக்கப்பட்ட மனு மீதான பூர்வாங்க விசாரணையின் பின்பு இடைக்காலத் தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. நாடாளுமன்றத்தில் அடிதடிகள் மத்தியில் மஹிந்த தரப்பினரின் பங்களிப்பின்றியே பிரதமர் மீதும் அமைச்சரவை மீதுமான நம்பிக்கையில்லாத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. தற்சமயம் நாடாளுமன்றம் இடையிடையே கூடிக் கலைந்தாலும் இலங்கை அரசாங்கமோ அமைச்சரவையோ இல்லாத ஒரு நாடாக மாறிவிட்டது.

ரணில் ஆதரவுத் தரப்பினர் நீதிமன்றத்தில் சமர்ப்பித்த மனுக்கள் தொடர்பான விசாரணைகள் நிறைவடைந்து விட்ட நிலையில் அனைத்துத் தரப்பினரும் நீதிமன்றத் தீர்ப்பை எதிர்பார்த்துக் காத்திருக்கின்றனர். நீதிமன்றத் தீர்ப்பு எப்படியிருந்த போதிலும் கடவுள் வந்து கட்டளையிட்டாலும் தான் ரணில் விக்கிரமசிங்கவைப் பிரதமராக நியமிக்கப் போவதில்லை என ஜனாதிபதி உறுதிபடத் தெரிவித்துள்ளார். ஆனால் ஐக்கிய தேசிய முன்னணியினரோ ரணில் விக்கிரமசிங்கவே பிரதமர் என்பதில் எவ்வித விட்டுக் கொடுப்புக்கும் தயாரில்லை.

நாடாளுமன்றத்தில் பெரும்பான்மை ஆதரவு கொண்ட கட்சியின் தலைவரையே பிரதமராக நியமிப்பது நாடாளுமன்ற சம்பிரதயாமாகும். ஆனால் நாடாளுமன்றத்தில் ஐக்கிய தேசிய முன்னணிக்கு 102 ஆசனங்களும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்புக்கு 90 ஆசனங்களும் மட்டுமே உண்டு. அத்தகைய நிலையில் இரு தரப்பிலும் எந்த ஒரு தரப்புமே ஆட்சியமைக்க முடியாது. ஆனால் ஐக்கிய தேசிய முன்னணிக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும், மக்கள் விடுதலை முன்னணியும் ஆதரவு வழங்கியமையால் 122 பேராக நாடாளுமன்றத்தில் பெரும்பான்மையை நிலைநாட்ட முடிந்தது.

ஆனால் மஹிந்தவா, ரணிலா பிரதமர் என்ற நிலை எழும்போது தாம் எவரையும் ஆதரிக்கப் போவதில்லை என மக்கள் விடுதலை முன்னணி திட்டவட்டமாக அறிவித்து விட்டது. இப்படியான நிலையில் ஐக்கிய தேசிய முன்னணி நாடாளுமன்றப் பெரும்பான்மையை தக்க வைக்கத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஆதரவைப் பெற்றேயாக வேண்டும். ஐக்கிய தேசிய முன்னணிக்கு அது அப்படி ஒன்றும் சிரமமான காரியமல்ல. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமைக்கும் ஐக்கிய தேசியக் கட்சிக்கும் இடையே பிரிக்க முடியாத நல்லுறவு நிலவி வருவது அப்படி ஒன்றும் இரகசியமான விடயமல்ல. தமிழரசுக் கட்சி காலத்திலிருந்து இன்றுவரை தமிழரசுக் கட்சியின் தீர்மானிக்கும் சக்தியாக இருக்கும் சில தலைவர்கள் ஐக்கிய தேசியக் கட்சியுடன் 'அடித்தாலும் உதைத்தாலும் நான் உந்தன் பிள்ளை" என்ற வகையில் உறவைப் பேணி வருகின்றனர்.

ஆனால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் இத்தகைய நடவடிக்கை தொடர்பாக அதன் பங்காளிக் கட்சியான ரெலோ எதிர்ப்பை வெளியிட்டுள்ளது. இதன் செயலாளர் ஸ்ரீகாந்தா இரவோடு இரவாக வவுனியாவில் ரெலோவின் மத்திய குழுவைக் கூட்டி தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் நடவடிக்கையைக் கண்டிக்கும் தீர்மானத்தை நிறைவேற்றி பத்திரிகைகளிலும் அடுத்தநாளே வெளியிட்டுவிட்டார். அதேவேளையில் ரெலோ அமைப்பின் தலைவர் செல்வம் அடைக்கலநாதன் இத்தீர்மானத்துக்குக் கையெழுத்து வைத்தார் எனவும் பின்பு ரணிலுக்கு ஆதரவான மனுவிலும் கையெழுத்திட்டார் எனவும் சில தகவல்கள் தெரிவித்துள்ளன.

அதேவேளையில் தமிழரசுக் கட்சிக்குள்ளும் நிபந்தனையற்ற ரணில் ஆதரவுப் போக்குக்கு எதிராக நாடாளுமன்ற உறுப்பினர் சிறிதரன் கடும் எதிர்ப்பைத் தெரிவித்துள்ளதாகத் தெரிய வருகின்றது. நாடாளுமன்றத்தில் ஐக்கிய தேசிய முன்னணிக்கு ஆதரவு வழங்குவதான சத்தியக் கடதாசி, நீதிமன்ற மனு, நாடாளுமன்றம் கலைப்பதற்கு முன்பிருந்த நிலையை மீண்டும் கொண்டுவிடும்படி கோரும் மைத்திரிக்கான கடிதம் என மூன்று மனுக்களிலும் 14 நாடாளுமன்ற உறுப்பினர்களும் கையெழுத்திட்டுள்ளனர்.

மேற்படி பத்திரங்களை சம்பந்தர் ஐயா நீட்டியதுமே மூன்று நாடாளுமன்ற உறுப்பினர்கள் பேனாக்களைத் தூக்கி விட்டனர் என்றும், வேறு சிலர் தயங்கித் தயங்கி கையெழுத்திட்டனர் என்றும் நாடாளுமன்ற உறுப்பினர் சிறிதரன் ஒப்பம் வைக்க முடியாதென முரண்டு பிடித்ததாகவும் உறுதிப்படுத்தப்படாத செய்திகள் தெரிவிக்கின்றன. ஆனால் அவ்வேளையில் தலைமை நாடாளுமன்ற உறுப்பினர்களில் ஒருவர் எல்லோரும் கையெழுத்து வைக்கும்போது சிறிதரன் மட்டும் வைக்காவிடில் அவர் மஹிந்தவிடம் பணம் வாங்கி விட்டார் எனக் கருதப்படக்கூடும் எனவும் அப்படிக் கருதப்பட்டால் தாங்கள் அதை மறுக்கப் போவதில்லையென மிரட்டியதை அடுத்து சிறிதரனும் ஒப்பமிட்டு விட்டாராம்.

மேலும் ஐக்கிய தேசிய முன்னணியைச் சேர்ந்த ஒரு குழுவினர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களிடம் ரணிலுக்கு ஆதரவாக இலக்கங்கள் பொறித்த அட்டைகளைத் தாங்கி ஜனாதிபதி செயலகத்தின் முன் நடத்தப்படும் ஆர்பாட்டத்தில் கலந்து கொள்ளும்படி கேட்டுக் கொண்டனராம். அப்போது சிறீதரன் தாங்கள் அரசியல் கைதிகள் விடுதலை, காணமல் ஆக்கப்பட்டோர் விவகாரம், காணி விடுவிப்பு போன்ற விடயங்கள் தொடர்பாகவே இதுவரை கொழும்பில் ஆர்பாட்டம் நடத்தவில்லை எனவும் ரணிலுக்காக மட்டும் எப்படி ஆர்பாட்டம் நடத்துவது எனக் கேட்டாராம். அத்துடன் இந்த விடயம் கைவிடப்பட்டதாம்.

அதேவேளையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் (18ஆம் பக்கம் பார்க்க)

# சிலம்பெடுக்கும் த.தே.ம. முன்னணி: தனித்துப் போகும் தமிழ் மக்கள் பேரவை



சி.வி.விக்னேஸ்வரனின் அரசியல் கட்சி அறிவிப்புக்குப் பின்னர் தமிழ் மக்கள் பேரவைக்குள் முரண்பாடுகள் - வேறுபாடுகள் உச்சம் பெற்றுள்ளன. இதன் விளைவாலேயே 'புளொட்" கட்சி வெளியேற்றப்பட்டது. இந்த வெளியேற்றத்துக் குக் காரணம் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினர். இவர்கள், இப்போது ஈ.பி.ஆர்.எல்.எவ். கட்சியையும் பேரவையில் இருந்து அகற்றிவிடத் துடிக்கின்றனர் என்பதை ஈ.பி.ஆர்.எல்.எவ். கட்சியினர் பேரவையின் தலைவர் சி.வி.விக்னேஸ்வரன், இணைத் தலைவர் மருத்துவ நிபுணர் லக்ஷ்மன் ஆகியோருக்கு எழுதிய 9 பக்கங்கள் கொண்ட கடிதம் வெளிப்படுத்தியுள்ளது.

தமிழ் மக்கள் பேரவை அரசியல் சார்பு நிலை அற்றது என ஆரம்பத்தில் விக்னேஸ்வரன் தெரிவித்திருந்தார். தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் விக்னேஸ்வரனுக்கும் எழுந்த கருத்து முரணை - வேறுபாட்டை - எதிர்ப்பை அடுத்து கூட்டமைப்பை விட்டு அவர் வெளியேறும் நிலையை எடுத்தார். முதலமைச்சராகப் பதவி வகிக்கும் காலம் முடிந்த மறுநாளே அவர், தனது அரசியல் நிலைப்பாட்டை - 'தமிழ் மக்கள் கூட்டணி"யை அறிவித்தார். அவரின் இந்த முடிவு தமிழ் மக்கள் பேரவை அமைப்பாகவே இயங்கும் என்ற அவரின் நேர்மை மக்களுக்கு மகிழ்ச்சியை ஏற்படுத்தியது.

ஆனால் விக்னேஸ்வரனின் தனிக் கட்சி அறிவிப்பால் அதிர்ந்து போனது தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியே. விக்னேஸ்வரன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் தொடர்ந்தும் இயங்கப் போவதில்லை என்பது ஓரளவுக்கு அனைவரும் அறிந்ததே. விக்னேஸ்வரன் கூட்டமைப்பை விட்டு விலகினால் தம்முடனே இணைய வேண்டும் என்பதே முன்னணியின் எண்ணமாக இருந்தது. இதற்காக அவர்கள் கட்சி சின்னம் தவிர கூட்டணி தலைமைப் பதவி உட்பட்ட பல விடயங்களில் விட்டுக் கொடுப்புகளை செய்ய முன்வந்தார்கள். விட்டுக் கொடுப்புகள் சரிவராத கட்டத்தில் - குறிப்பாக உள்ளூராட்சி சபைத் தேர்தல் சமயத்தில் - பல தகிடுதத்தங்களில் ஈடுபட்டனர்.

இவர்களின் தகிடுதத்தங்கள் விக்னேஸ்வரனிடம் அம்பலப்பட்டுப் போனது. இது தொடர்பில் அவர் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார், கஜேந்திரன் ஆகியோரை அழைத்துத் தனது அதிருப்தியை வெளிப்படுத்தியிருந்தார். இதைத் தொடர்ந்து அவர்கள் விக்னேஸ்வரனுடன் பேச்சு நடத்த முயன்றனர். ஆனால் அவர், அவர்களைத் தவிர்த்து விட்டார் என அவருக்கு நெருக்கமான வட்டாரங்கள் தெரிவித்தன. எது எப்படி இருப்பினும் விக்னேஸ்வரனின் தனிக்கட்சி அறிவிப்பு ஒருபுறம் அதிர்ச்சியை - அதிருப்தியை முன்னணிக்கு அளித்தாலும் மறுபுறம் நிம்மதியளித்தது. ஏனெனில் விக்னேஸ்வரனின் அறிவித்தது தனிக்கட்சி அல்ல கூட்டணி என்பதுதான்.

விக்னேஸ்வரன் தலைமையில் புதிய கூட்டணி உதயமானாலும் அது தேர்தலில் போட்டியிட வேண்டிய சின்னம் தமது தாய்க்கட்சியான அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸின் சின்னமாக இருக்க வேண்டும் என முடிவு எடுக்கப்பட்ட போதும் அவை பலனளிக்கவில்லை. இந்நிலையில் அவர்கள் கையில் எடுத்த ஆயுதமே 'மித்ரபேதம்" தமிழ் மக்கள் பேரவைக்குள் மித்ரபேதம் செய்வதன் மூலம் விக்னேஸ்வரனைத் தம் வழிக்குக் கொண்டு வரலாம் என்பதுதான்.

இந்த வழியில்தான் புளொட்டுக்கு எதிராக ஒழுங்கு விதி குற்றச்சாட்டை எழுப்பியது தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி. ஒழுங்கு விதிகள் என்பவை அனைவருக்கும் பொதுவானவை. அது தமிழ் மக்கள் பேரவையை உருவாக்கத்தில் இருந்து பங்கெடுத்த புளொட்டுக்கும் பொருந்தும். ஆகவே அதன் மீது ஒழுங்குப் பிரச்சினை கிளப்பியது தவறானதல்ல. ஆனால் அமைப்பை விட்டு வெளியேற்றும் விதமாக நடந்து கொண்டதே இங்கு பிழையாகிறது. புளொட்டுக்கு எதிராக சிலம்பெடுத்த முன்னணி அதை பேரவையில் இருந்து வெளியேற்றவே விரும்பியது. தேர்தல் வேட்டைக்காக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பையே சற்று அதிகமாகப் புளொட் பற்றிப் பிடித்திருந்ததால் அரசியல் விஸ்வரூபம் எடுத்த விக்னேஸ்வரன் ஆதரவாளர்களும் புளொட்டின் வெளியேற்றத்தைப் பெரிதாகக் கண்டுகொள்ளவில்லை.

முதலடி வெற்றி கொடுத்த நிலையில் அடுத்ததாக ஈ.பி.ஆர்.எல்.எவ். கட்சியை வெளியே தள்ளும் முயற்சியை எடுத்தது முன்னணி. ஆனால் அதற்குள்ளாகவே சுரேஷ் பிரேமச்சந்திரன் முந்திக் கொண்டார். 9 பக்கங்கள் கொண்ட கடிதம் ஒன்றையும் அனுப்பி வைத்தார். ஈ.பி.ஆர்.எல்.எவ். கட்சி தம்முடனான இணைவுக்கு ஒத்துவராது என்பதாலேயே அக்கட்சியை வெளியேற்றுவது குறித்து முன்னணியினர் சிந்தித்தனர். அவர்கள் இந்த முடிவுக்கு வருவதற்கு நடந்து முடிந்த உள்ளூராட்சி சபைத் தேர்தலே காரணமாக இருந்தது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் இருந்து ஈ.பி.ஆர்.எல்.எவ். விலகிய சமயத்தில் உள்ளூராட்சித் தேர்தல் இடம்பெற்றது. இதனால் ஈ.பி.ஆர்.எல். எவ்வுடன் இணைந்து தேர்தலை சந்திக்க தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினர் தயாராக இருந்தனர். ஆனால் அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸின் சின்னத்தில் போட்டியிட ஈ.பி.ஆர்.எல். எவ். கட்சியினர் தயாராக இருக்கவில்லை. தமிழர் விடுதலைக் கூட்டணியின் சின்னத்தில் பயணத்தைத் தொடரவே ஈ.பி.ஆர்.எல்.எவ். விரும்பியது. சி.வி.விக்னேஸ்வரனுக்கு நெருக்கமாக அக்கட்சியின் முக்கியஸ்தர்கள் இருந்தனர். இதனால் அவர்கள் விக்னேஸ்வரனை தம் பக்கம் இழுக்கும் நோக்கில் செயற்பட்டிருந்தனர்.

ஆனால் உள்ளூராட்சி தேர்தலில் விக்னேஸ்வரன் பேராமைதி காத்தார். ஈ.பி.ஆர்.எல்.எவ். தனித்துப் போட்டியிட்ட நிலையில், சைவ மகா சபை போன்ற அமைப்புகளை ஈர்த்துக் கொண்ட தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி தமிழ் மக்கள் பேரவை என்ற பெயரை ஒத்ததாக தமிழ்த் தேசியப் பேரவை என்ற கூட்டுப் பெயரைப் பயன்படுத்தித் தேர்தலை சந்தித்தது. இது தொடர்பில் விக்னேஸ்வரன் அதிருப்தியை வெளியிட்டபோதும் வாக்கு வங்கியைப் பலப்படுத்துவதை நோக்காகக் கொண்டு செயற்பட்ட முன்னணியினர் அதை சட்டை செய்திருக்கவில்லை. இந்நிலையிலேயே முன்னாள் முதலமைச்சர் விக்னேஸ்வரனின் அரசியல் கூட்டணியை சைக்கிள் சின்னத்தில் பயணிக்க வைக்க காய்களை நகர்த்தியது.

ஆனால், முன்னணியோ சாணக்கியம் செய்வதாக எண்ணிக் கொண்டு தமிழ் மக்கள் பேரவையை குழப்பும் - நீர்த்துப் போகச் செய்யும் வகையிலான செயல்களை முன்னெடுக்கிறது. புதிய கட்சியில் அரசியல் பயணத்தை தொடங்கிய விக்னேஸ்வரனும் இதற்கு ஒத்துதுகிறார். இவர்களின் செயற்பாடுகள் தமிழ் மக்களின் ஏகோபித்த ஆதரவைப் பெற்ற தமிழ் மக்கள் பேரவையை அழித்து விடாது இருந்தால் போதும்...!

# பசியில் தவிக்கும் ஏமன் குழந்தைகளும் சவுதி அரேபியா - அமெரிக்கா உறவும்!

இருபத்தொராம் நூற்றாண்டின் மிகக் கொடூரமான உள்நாட்டுப் போரைச் சந்தித்து வருகிறது ஏமன். 'ஏமன் உள்நாட்டுப் போர் மனிதனால் உருவாக்கப்பட்டுள்ள மிக மோசமான நெருக்கடி" என ஐ.நா. சபை குறிப்பிட்டுள்ளது. ஏமன் உள்நாட்டுப் போரில் அமெரிக்காவின் தலையீட்டை முடிந்த அளவுக்கு அல்லது முற்றிலுமாக நிறுத்த வேண்டும் என அமெரிக்க செனட் சபை கடந்த நவம்பர் 28 ஆம் நாள் தீர்மானம் ஒன்றை 63 / 37 என்ற பெரும்பான்மை உறுப்பினர்களின் ஆதரவோடு நிறைவேற்றியது. இது விரைவில் முழு விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட இருக்கிறது.

ஏமன் யுத்தத்தில் முழு வீச்சில் ஈடுபட்டுவரும் சவுதி அரேபியாவுக்கு அமெரிக்கா சகல உதவிகளையும் செய்து வருகிறது. அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப், சவுதி அரேபியாவுடன் அதிக நெருக்கம் காட்டி வருகிறார். இந்நிலையில் அமெரிக்காவில் ஆளும் கட்சியான குடியரசுக் கட்சி, பெரும்பான்மை பலம் கொண்ட செனட் அவையில் பெரும்பான்மை ஆதரவுடன் இந்தத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது ஜனாதிபதி ட்ரம்பிற்கு பின்னடைவாக அமைந்துள்ளது.

• • •

ஏமன் உள்நாட்டுப் போர்2015 மார்ச்சில் தீவிரமடைந்தது என்றாலும், அதற்கான தொடக்கம் 2011 ஆம் ஆண்டு தொடங்கிய அரபு எழுச்சியிலிருந்தே வருகிறது. துனீசியாவில் தொடங்கிய அரபு எழுச்சி பல்வேறு மத்திய கிழக்கு மற்றும் ஆபிரிக்க நாடுகளில் ஆட்சி மாற்றத்திற்கு வித்திட்டது. அதன் தொடர்ச்சியாக ஏமனிலும் ஆட்சி மாற்றம் ஏற்பட்டது. 33 ஆண்டுகள் ஆட்சியிலிருந்த அலி அப்துல்லா சாலேவுக்கு எதிராகப் புரட்சி உருவாகவே துணை ஜனாதிபதி மன்சூர் ஹாதியிடம் ஆட்சிப் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டது.

புதிய ஜனாதிபதி மன்சூர் ஹாதி, பதவிக்கு வந்த பிறகு ஏமனில் செயல்பட்டுவந்த ஹௌதி குழுக்கள் ஏமனின் வடக்குப் பகுதியில் உள்ள சத்தா மற்றும் அதன் அருகாமை மாகாணங்களைக் கைப்பற்றின. முன்னாள் ஜனாதிபதி சாலேவுக்கு ஆதரவாகச் செயல்பட்டு வந்த குழுக்களுக்கும் ஹௌதி உடன் இணைந்து தலைநகர் சனா'வையும் கைப்பற்ற முயன்றன. இதனால் ஜனாதிபதி நாட்டை விட்டு வெளியேற நேர்ந்தது.




ஜனாதிபதி ஹைதிக்கு ஆதரவாகச் சவுதி, ஐக்கிய அரபு அமீரகம் உள்ளிட்டவை ஹௌதி மற்றும் முன்னாள் ஜனாதிபதி சாலேவின் படைகளை எதிர்த்து 2015 மார்ச் முதல் போரிடத் தொடங்கின. அன்று முதல் ஏமன் உள்நாட்டுப் போர் தொடர்ந்து நடைபெற்று வருகிறது. ஹௌதி குழுக்களுக்கு ஆதரவாக இரான் செயற்படுவதாகத் தொடர்ந்து குற்றம் சுமத்தப்பட்டு வருகின்றன. இதை ஈரான் மறுத்தாலும் அமெரிக்கா, சவுதி அரேபியா தொடர்ந்து ஈரானைக் குற்றம்சாட்டி வருகின்றன.

சவுதி தலைமையிலான ஜனாதிபதி ஹைதி ஆதரவுப் படைக்கு அமெரிக்கா, பிரிட்டன் உள்ளிட்ட நாடுகள் தொடர்ந்து இராணுவ உதவி, ஆயுதம் மற்றும் தொழில்நுட்ப உதவிகளை அளித்து வருகிறது. தீவிரவாதக் குழுக்கள் உள்ள பகுதிகளின் மீது வான்வழித் தாக்குதலில் ஈடுபடப்போவதாகச் சவுதி அறிவித்திருந்தது. ஆனால், பெரும்பாலான ஏவுகணைத் தாக்குதல்கள், பொதுமக்கள் வாழும் பகுதிகளில்தான் நடைபெற்றுள்ளன என்பதை ஐ.நா-வும் உறுதிப்படுத்தியுள்ளது.

மூன்று ஆண்டுகளுக்கு மேலாக நடைபெற்று வரும் இந்த யுத்தத்தில் ஆயிரக்கணக்கான மக்கள் உயிரிழந்தனர். 20 லட்சத்துக்கும் அதிகமான மக்கள் உள்நாட்டிலேயே இடம்பெயர்ந்துள்ளனர். மருத்துவ வசதிகள் கிடைக்கப்பெறாமல் லட்சணக்கான மக்கள் நோய்த் தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளனர். கொலரா தொற்றினால் மட்டும் 85,000 குழந்தைகள் வரை உயிரிழந்திருக்கலாம் எனச் சில புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன. மேலும் லட்சக்கணக்கான குழந்தைகள் ஊட்டச்சத்து குறைபாடுகளால் பாதிக்கப்பட்டுள்ளனர். ஏமனுக்கான போக்குவரத்தையும் சவுதி முடக்கி வைத்துள்ளதால் உணவு, மருந்துப் பொருள்கள், பாதிக்கப்பட்டவர்களுக்குச் சென்று சேர்வதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது.

ஏமன் உள்நாட்டுப் போரில் ஈடுபட்டுள்ள அனைத்துத் தரப்புமே போர்க் குற்றத்துக்குச் சாட்சியானவர்கள் என்று ஐ.நா., கடந்த ஒகஸ்ட் மாதம் தெரிவித்தது. போரை முடிவுக்குக் கொண்டுவர ஏற்பாடு செய்யப்பட்ட அனைத்துப் பேச்சு நடவடிக்கைகளுமே தோல்வியில்தான் முடிந்துள்ளன. மத்திய கிழக்கில் அமெரிக்காவின் செயல்களுக்கு ஆதரவாக இருக்க வேண்டும் என்பதற்காக இஸ்ரேல், சவுதி அரேபியா உள்ளிட்ட நாடுகளுக்குத் தொடர்ந்து நிதியுதவி அளித்து சர்வதேச அரங்கில் ஆதரவாகச் செயல்பட்டு வருகிறது. கடந்த ஆண்டு மே மாதம் ட்ரம்பின் சவுதி பயணத்தின்போது, அந்த நாட்டுடன் 110 பில்லியன் மதிப்பிலான ராணுவ ஒப்பந்தங்கள் கையெழுத்தாகின.

சவுதி அரேபியா தலைமையிலான அரபு நாடுகள் கத்தார் மீது எண்ணற்றத் தடைகளை விதித்தன. இதற்கு அமெரிக்க ராணுவம், அப்போது வெளியுறவுத் துறைச் செயலராக இருந்த ரெக்ஸ் டில்லர்சன் வருத்தம் தெரிவித்த போதும் டிரம்ப் வரவேற்று சவுதிக்கு ஆதரவு தெரிவித்தார். சமீபத்தில் மிகப்பெரிய அளவில் சர்ச்சையைக் கிளப்பியது சவுதி பத்திரிகையாளர் ஜமால் கசோகியின் படுகொலை. ஜமால் கசோகி காணாமல் போனார் எனச் செய்தி வரத் தொடங்கிய போது, சவுதி தன்னுடைய பங்கு எதுவும் இல்லை என மறுத்து வந்தது. சர்வதேச அளவில் அழுத்தம் அதிகமானதால் துருக்கியில் உள்ள சவுதி தூதரகத்தில் ஜமால் கசோகி கொடூரமான முறையில் படுகொலை செய்யப்பட்டதைச் சவுதி இறுதியாக ஒப்புக்கொண்டது. இந்தக் கொலைக்கு சவுதி இளவரசர் முகமது பின் சல்மானே நேரடியாகக் உத்தரவிட்டார் எனவும் குற்றம் சாட்டப்பட்டு வந்தது. அமெரிக்க உளவு அமைப்பான சி.ஐ.ஏ. கூட இளவரசர் சல்மான்தான் கசோகியின் கொலைக்கு உத்தரவிட்டார் என்று தெரிவித்த போதிலும் அமெரிக்க ஜனாதிபதி டிரம்ப் சவுதிக்கு ஆதரவாகவும் இளவரசர் சல்மானைப் புகழ்ந்தும் பேசி வருகிறார்.

இத்தகைய சூழலில் சவுதி முன்னின்று நடத்தக்கூடிய ஏமன் போரில், அமெரிக்கா பின்வாங்கும் என்பது உறுதியற்ற நம்பிக்கையாகத்தான் உள்ளது. தற்போது அமெரிக்க செனட் சபையில் நிறைவேற்றப்பட்டுள்ள தீர்மானத்தைப் போன்று, கடந்த மார்ச் மாதமும் ஒரு தீர்மானம் கொண்டு வரப்பட்டுத் தோற்கடிக்கப்பட்டது. தற்போது ஆளும்கட்சி பெரும்பான்மையாக உள்ள செனட் சபையில் உறுப்பினர்களின் ஆதரவோடு இந்தத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டதற்கு ஜமால் கசோகியின் படுகொலையும் அதற்கு ட்ரம்பின் எதிர்வினையும்தான் முக்கிய காரணமாகக் கூறப்படுகிறது.

இந்தத் தீர்மானத்தை கொண்டு வருவதில் செனட் சபையின் உறுப்பினர் பெர்னி சாண்டர்ஸ் மிக முக்கியப் பங்காற்றினார். அதற்கு மிகப்பெரிய அளவில் வரவேற்பு கிடைத்தது. அமெரிக்கக் குடிமக்களின் சார்பாக, சாண்டர்ஸூக்கு எழுதப்பட்ட திறந்த மடல் ஒன்று இணையத்தில் உலவ ஆரம்பித்தது. அதில் 'அமெரிக்காவின் மொத்த நிதியில் 60 வீதத்துக்கும் அதிகமானது ராணுவத்துக்காகப் பயன்படுகிறது. இதில் ஒரு சிறு பங்கு, உலகம் முழுவதும் பட்டினியை ஒழிக்கவும், சுத்தமான நீரை வழங்கவும், பல்வேறு நோய்களைத் தீர்க்கவும் பயன்படும். ராணுவத்தில் செலவிடப்படும் லட்சக்கணக்கான கோடிகளை தவிர்த்துவிட்டு எந்தவொரு நல்லெண்ண நடவடிக்கைகளைப் பற்றியும் பேச முடியாது. போரும், போருக்கான ஆயத்தமும்தான், நம்முடைய இயற்கைச் சூழலுக்கு எதிரான முன்னணி அழிவு சக்திகள்.

(19ஆம் பக்கம் பார்க்க)

# வாரப்பலன்

### மேடம்
சொந்தத்தொழில் செய்பவர்களுக்கு, புதிய வாடிக்கையாளர்கள் சேருவார்கள். அவசர வேலையை முடிப்பதற்காக ஓய்வின்றி உழைப்பீர்கள். குடும்பத்தில் அமைதியான போக்கு காணப்படும். குலதெய்வ வழிபாடு செய்வது நல்லது.

### ரிஷபம்
பொறுப்புகளில் கவனமாக இல்லாவிட்டால் உயரதிகாரிகளின் கோபத்திற்கு ஆளாவீர்கள். குடும்பத்தில் சிறுசிறு கடன் தொல்லைகள் ஏற்படலாம். கூட்டுத்தொழில் முயற்சி லாபம் தரும். உடல் ஆரெக்கியத்தில் கவனம் அவசியம்.

### மிதுனம்
சொந்தத் தொழில் செய்ப வர்களுக்கு வேலைப்பளு அதிக மாகும். புதிய நபர்களின் அறி முகத்தால், தொழில் ரீதியான முன்னேற்றம் ஏற்படக்கூடும். உத்தியோகஸ் தர்கள் சிலருக்கு பொறுப்புகள் அதிகமாகும். செல்வாக்கு மிகுந்த பதவிகள் கிடைக்கும்.

### கடகம்
சொந்தத் தொழில் செய்பவர்கள் ஓய்வின்றி உழைக் கும்படி நேரலாம். உழைப்புக் கேற்ற பாராட்டுக் கிடைக்கும். கூட்டுத்தொழிலில் வழக்கமான லாபம் காணப்படும். புதிய தொழில் தொடங்கத் திட்டமிடுவீர்கள்.

### சிம்மம்
குடும்பத்தில் கடன் தொல் லைகளால் பாதிப்பு ஏற்படாது. பெண்களுக்கு ஆடை, ஆபரணச் சேர்க்கை உண்டு. வெளியில் செல்லும் போது கவனம் தேவை.வாடிக்கையாளர்கள் திருப்திப்படக் கூடியளவுக்கு இவ்வார நடவடிக்கை இருக்கும்.

### கன்னி
பழைய நிறுவனங்களில் இருந்து வாய்ப்புகள் தேடி வரும். வேலைகளில் திருப்திப் படுவதால் பணத்துக்கு அதிக முக்கியத்துவம் அளிக்க மாட்டீர்கள். குடும்பத்தில் சிறு சிறு பிரச்சினைகள் தோன்றினாலும் அவற்றை சமாளித்து விடுவீர்கள்.

### துலாம்
குடும்பத்தில் மகிழ்ச்சியான சூழ்நிலை காணப்படும்.கலை ஞர்களுக்கு புதிய ஒப்பந்தங்கள் மூலம் பண வரவுகள்.கூட்டுத் தொழில் வியாபாரம் எதிர்பார்க்கும் லாபத்தைக் கொடுக்கும். காரியங்கள் பலவற்றில் முயற்சியுடன் ஈடுபட்டு, முன்னேற்றம் காண்பீர்கள்.

### விருச்சிகம்
தளராத முயற்சியால் வெற்றி அடைவீர்கள். கூட்டுத் தொழில் வியாபாரத்தில் லாபம் அதிகரிக்கும். பணப்பொறுப் புகளில் உள்ளவர்கள் கவனமாக இல்லா விட்டால் பிரச்சினைகளைச் சந்திக்க நேரிடும். பங்குச்சந்தை வியாபாரம் நன்றாக நடை பெறும்.

### தனுசு
சில காரியங்களில் தளர்வுகள் ஏற்பட்டு சிந்தனையைக் கிளறும். திட்டமிட்டபடி வரவு வந்து சேரும்.கூட்டுத் தொழிலில் லாபம் கிடைக்கும்.கலைஞர்களுக்கு உதவி கிடைக்கும்.புதிய வரவினால் பெண்களுக்கு உற்சாகம் ஏற்படும். விலை உயர்ந்த பொருட்கள் காணாமல் போகலாம்.


### மகரம்
சொந்தத் தொழில் செய்ப வர்கள், புதிய வேலைகளில் தீவிர கவனம் செலுத்துவார்கள். வியாபாரத்தில் எதிர்பார்த்த லாபம் இருக்கும். தொழில் போட்டி களைச் சமாளிப்பதற்கு ஆயத்தமாவீர்கள். குடும்பம் சீராக நடைபெற்றாலும் இடையி டையே சில பிரச்சினைகள் ஏற்படலாம்.

### கும்பம்
சொந்தத் தொழில் செய்பவர்களுக்கு வேலைப்பளு அதிகரிக்கும். வரவேண்டிய பாக்கிகளை வசூலிக்கலாபம். வியாபாரத்தில் எதிர்பார்க்கும் லாபம் கிடைக்காது. மூலப்பொருள்களின் தட்டுப்பாட்டால் வியாபாரத்தில் ஏற்றத் தாழ்வுகள் காணப்படும்.

### மீனம்
முயற்சி மேற்கொண்டா லும், சில காரியங்களில் எதிர்பார்த்த வெற்றியைக் காண முடியாது. உத்தியோ கஸ்தர்கள் வேலைப்பளுவால் அவதிப்பட நேரலாம். கூட்டுத் தொழிலில் ஏற்றத் தாழ்வுகள் ஏற்படும். போட்டிகளைச் சமாளிக்கும் திட்டம் பலனளிக்காது.



வட மாகாண ஆளுநர் அலுவலகத்தின் முன்பாகச் சாகும்வரை உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டிருக்கும் வட மாகாணத் தொண்ட ராசிரியர்கள்.




சுன்னாகம் பொலிஸ் நிலையத்தை அமைக்கத் தனியார் ஒருவரின் காணியை சுவீகரிப்பதற்கு எதிராக உடுவில் பிரதேச செயலக முன்பாகப் போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டுள்ளது



இணுவில் பொது நூலகத்தினால் நடத்தப்படும் முன்பள்ளிச் சிறுவர்களின் கலைவிழாவின்போது




நிறைவேற்று ஜனாதிபதி முறைமையை ஒழித்து சாதாரமாக ஜனாதிபதி செயற்பட வைக்கும் விதத்தில் அரசியல் மாற்றம் ஒன்றைக் கொண்டுவரவேண்டும் என ஹட்டனில் மறையக இளைஞர் அமைப்பு களின் ஏற்பாட்டில் ஆர்ப்பாட்டம் ஒன்று நடை பெற்றுள்ளது.




வவுனியாவில் கற்குவாரி அகழ்வைத் தடுக்கக்கோரி ஆர்ப்பாட்டம் ஒன்று வவுனியா கோமரசங்குளம் ஜேசுபுரம் கிராமத்தில் நடைபெற்றது. இதனால் அப்பகுதியில் நீர் நிலைகள் பாதிப்பிற்குள்ளாகின்றன என அச்சம் தெரிவிக்கப்பட்டுள்ளது




கிளிநொச்சி மாவட்ட வர்த்தகப் பொதுத் தொழிலாளர் சங்கத்தினரால் பணியாளர்களின் உரிமையை வலியுறுத்திக் கவனயீர்ப்புப் போராட்டம் ஒன்று நடைபெற்றது.

# தோட்டக்காரனும் குரங்கும்



அது ஒரு அழகிய கிராமம். இந்தக் கிராமத்தில ஒரு தோட்டக்காரன் வாழந்து வந்தான். அவன் தினமும் தோட்டத்திலுள்ள செடிகொடிகளுக்கு தண்ணீர் ஊற்றி வந்தான். தண்ணீர் ஊற்றும்போதெல்லாம் அங்கு சில குரங்குகள் வந்து விளையாடும். பல வருடங்கள் இது தொடர்ந்தது. அந்தக் தோட்டக்காரனும் குரங்குகளும் நண்பர்களாக மாறினார்கள். தோட்டக்காரன் செய்வதைப் பார்த்து குரங்குகளும் செய்து வந்தன.

ஒரு நாள் தோட்டக்காரன் பக்கத்து ஊருக்கு போகவேண்டி இருந்தது. குரங்குகளை அழைத்து விஷயத்தைச் சொன்னான். குரங்குகளுக்கு சந்தோஷம். ஆனால் எந்த மரத்துக்கு எவ்வளவு தண்ணீர் ஊற்றுவதென்று குரங்குகளுக்குத் தெரியவில்லை. வேர் பெரிதாக இருந்தால் அதிகமாக நீர் ஊற்றுங்கள் என்று தோட்டக்காரன் சொல்லி வைத்தான்.

வெளியூர் சென்று திரும்பிய தோட்டக்காரன்,அனைத்துச் செடிகளும், பிடுங்கப்பட்டு, தரையில் கிடந்து வாடுவதைப் பார்த்து அதிர்ந்து போனான். வேர் பெரிதா சிறிதா என்று அறிய செடிகளைப் பிடுங்கிப் பார்த்தோம். அவ்வளவுதான் என்றன குரங்குகள்.

நீதி- புத்தியில்லாதவர்களிடம் பொறுப்பை விடுவது முட்டாள்தனமான செயல்

## ரகர, றகர வேறுபாடு




சொல்லில் றகர மெய்யும், ரகர மெய்யும் எவ்வாறு வரும், எவ்வாறு வராது என்பதை அறிய கீழே தரும் குறிப்புகள் உங்களுக்கு உதவியாக அமையலாம்.

1. றகர மெய் தன் வர்க்கத்தோடு (றகர வரியோடு) சேர்ந்து வரும்.
ரகர மெய் தன் வர்க்கத்தோடு (ரகர வரியோடு) சேர்ந்து வராது.
உதாரணம் - குற்றம், விற்றான், நெற்றி, புற்று
2. றகரம், னகர மெய்க்குப் பின் வரும் ரகரம் , னகர மெய்க்குப் பின் வராது
உதாரணம் - குன்றம், தின்றான், பன்றி, சான்றோர், கன்று
3. றகரமேனும் ரகரமேனும் தமிழ்ச்சொற்களில் முதலெழுத்தாக வருவதில்லை.ரகரத்தை முதலெழுத்தாக உடைய சில வட சொற்கள் தமிழில் வழங்குவதுண்டு.
உதாரணம் - ரங்கன், ராமன், ரோமம்.
இவற்றை அரங்கன், இராமன், உரோமம் என அ, இ, உ என்னும் மூன்று உயிரெழுத்துகளில் ஏற்ற ஒன்றை முதலில் கூட்டி எழுதல் வேண்டும்.
4. றகரமெய் ஒரு சொல்லின் ஈற்று எழுத்தாக வராது.
ரகரமெய் ஒரு சொல்லின் ஈற்று எழுத்தாக வரும்.
உதாரணம் - நீர், தேர், ஆசிரியர், மலர், பதர்

(அடுத்த வாரம் தொடரும்)

## ஏன் ஏன் ஏன்?

### பனித்துளி புல் நுனியிலிருந்து கீழே விழாதது ஏன்?



எண்ணெய் தொட்டால் ஒட்டிக் கொள்வதுபோல நீரும் ஒட்டிக் கொள்கிறதா என்று கேட்டால் பதில் இல்லை என்றே சொல்ல வேண்டும். நீருக்கும் ஒட்டிக் கொள்ளும் தன்மையுண்டு.ஒரு சிறு வாயுள்ள பாத்திரத்தை நீரால் நிறைத்துப் பார்த்தால், நீர் விளிம்புக்கு மேலே ஒரு வளைவு போல நிற்பதை காண்பீர்கள். ஏதோவொரு மெல்லிய தோல் படர்ந்து நீரைக் கீழே விழாமல் காப்பது போல இருக்கும். அதுபோல்தான் பனித்துளியும் புல்நுனியில் விழாமல் நிற்கிறது. தாமரை இலைமேலே நீர், முத்துக்களைப் போல் உருளுவதற்கும் இதுதான் காரணம்!




## அன்னத்தைப் பாராய்

பாலைப்போன்ற வெள்ளை நிற
அன்னத்தைப் பாராய்-அது
படகு போலே அசைந் திடாமல்
நீந்துது பாராய்

நீளமாக வளைந் திருக்கும்
கழுத்தினைப் பாராய்-அதோ
நீருள் தலையை - விட்டு மீனைப்
பிடிக்குது பாராய்

அன்னை முதுகில் ஏறிச் செல்லும்
குஞ்சுகள் பாராய்-அவை
அச்சம் வந்தால் சிறகுக் குள்ளே
ஒளிவதைப் பாராய்

கன்னங் கரிய நிறத்தில் கூட
அன்னம் இருக்குதே-இதைக்
காணலாமே மிருகக் காட்சி
சாலை தன்னில்



## அறியாத பழமொழிகளும் அறிந்த விளக்கங்களும்

**1. பெண்ணின் கோணல் பொன்னிலே நிமிரும்**

அழகில்லாத பெண்ணை, மின்னும் நகைகள் அணிவிக்க வைத்து அழகாக்கி விடலாம் என்று நம்மை நினைக்க வைக்கும் பழமொழி இது. ஆனால் அதன் உண்மையான அர்த்தம் வேறு. நல்ல பணச் செல்வாக்குள்ளவர்கள், பொல்லாதவற்றையும் தங்கள் பணபலத்தால் செய்து விடுவார்கள் என்பதே இதன் பொருள்.

**2. கடுகும் களவுதான் கற்பூரமும் களவுதான்**


ஒரு குற்றத்தைச் செய்து விட்டு, அது சிறிது தானே என்று நழுவிவிட முடியாது. நீதியின் முன நிலையில் குற்றம் குற்றமே!


**3. இன்றைக்கு இலை அறுத்தவன் நாளைக்கு குலை அறுக்கமாட்டானா?**

எதையும் முளையில் கிள்ளாதவரை, அது நாளைய பொழுதுகளில் விபரீத விளைவுகளையே கொண்டுவரும்.


## விடுகதை நேரம்

1. அடி மலர்ந்து நுனி மலராத பூ எது?
2. அச்சு இல்லாத சக்கரம் அழகு தரும் சக்கரம். அது என்ன?
3. அரையடிப் புல்லில் ஏறுவான் இறங்குவான். யார் இவன்?
4. அந்தரத்தில் தொங்குது செம்பும் நீரும் . அது என்ன?
5. அடர்ந்த காட்டின் நடுவே ஒது பாதை . அது என்ன?










விடைகள்
1. வாழைப்பூ 2. வளையல் 3. பேன்
4. தேங்காய் 5. வகிடு

## கேள்விக்கென்ன பதில்?

1. நடுச்சாமத்தில் சூரியன் தெரியும் ஒரு நாடு எது?
2. பித்தளையில் கலந்துள்ள உலோகங்கள் எவை?
3. உலோகத்தில் வார்த்த அச்சு எழுத்துக்களை முதன்முதலாக அறிமுகப்படுத்தியவர் யார்?
4. ஊற்றுப் பேனா எனப்படும் மைவிட்டு எழுதும் பேனாவை கண்டுபிடித்தது யார்?
5. குருடர் படிப்பதற்க அச்சிடும் முறையைத் தந்தவர் யார்?

விடைகள்
1. நார்வே 2. செம்பு, துத்தநாகம்
3. கூட்டன்பர்க் 4. வாட்டர்மேன் (அமெரிக்கா)
5. லூயி பிரெய்லி (பிரான்ஸ்)



# சரணம் சரணம் ஐயப்பா...!

மகாவிஷ்ணு மோகினியாக உருக்கொண்டு அவதாரம் எடுத்து, சிவவிஷ்ணு சக்திகள் சங்கமமாக - கர்ப்ப வாசம் புரியாமல் சங்கல்ப மாத்தரத்தில் அவதரித்தவர் ஸ்ரீமகாசாஸ்தா. கயிலையங்கிரியில் தனக்கென ஓர் உலகத்தை உருவாக்கி, பூரணை புஷ்கலை எனும் தேவியரை மணந்து அருளாட்சி நடத்திவந்த ஸ்ரீமகாசாஸ்தா, மஹிஷி எனும் அரக்கியை அழிக்கும் பொருட்டு, பூவுலகில் மனித அவதாரம் எடுக்கத் தீர்மானித்தார்.

ஆகாய கங்கை வழியாக பம்பை ஆற்றங்கரையை அடைந்து, அங்கே குழந்தையாகத் தோன்றினார். பரமேஸ்வரன் கொடுத்த நவரத்தின மாலையை கழுத்தில் அணிந்திருந்த காரணத்தால், ஸ்ரீமணிகண்டன் என்று அவருக்குத் திருப்பெயர் வாய்த்தது.

இந்த இடத்தில் ஓர் உண்மையை நாம் அறிவது அவசியம். மணி என்றால்... பெரும்பாலும் எல்லோரும் கருதுவது போல் கோயில் மணி அல்ல. பொதுவாக 'மணி' என்றால், நவரத்தின மணி என்றே பொருள். கழுத்தில் நவரத்தினங்கள் ஜொலித்த காரணத்தால், அவருக்கு 'மணிகண்டன்' என்று திருப்பெயரிட்டு வளர்த்து வந்தான், ராஜசேகர பாண்டியன்.

அவதார நோக்கத்துக்காக பால பிரம்மச்சாரியாகவே வாழ்ந்த மணிகண்டன், மஹிஷியை சம்ஹாரம் செய்தபிறகு, கலியுக வரதனாக கோயில் கொள்ளத் தீர்மானித்தான். சாஸ்தாவின் அவதாரமான ஸ்ரீமணிகண்டனை, மஹா யோகபீடமாக விளங்கும் ஸ்தலமான சபரி பர்வதத்தில் பரசுராமர் பிரதிஷ்டை செய்தார்.

உலக நன்மைக்காக யோகத்திலேயே ஆழ்ந்து தவக்கோலம் பூண்ட மணிகண்டன், வருடத்தில் ஒருநாள் - மகர ஸங்க்ரமத்தன்று கண் விழித்து பக்தர்களை அனுக்ரஹிப்பேன் என்று வாக்களித்தார். பாண்டியர்களின் குருவான அகத்திய மாமுனிவரே சபரி மலைக்கான விரத வழிமுறைகளை வகுத்தளித்தார்.

# பகட்டு

## நல்லறங்களை அழிக்கும்


மிகச் சிறிய செயலாக இருந்தாலும் அதை இறைவனுக்காக என்று தூய மனதுடன் செய்யும்போதுதான் அதற்கான நற்கூலி - புண்ணியம் கிடைக்கும். அப்படியில்லாமல், பாராட்டுக்காகவும், பகட்டுக்காகவும் செயற்படுவது நல்லறங் களையே செல்லரிக்கச் செய்துவிடும் ஒரு தீய பண்பாகும். இது குறித்து இஸ்லாமியப் பேரறிஞர் மௌலானா மௌதூதி பின்வருமாறு விளக்குகிறார்.

நல்லது செய்ததற்கு பாராட்டைப் பெற வேண்டும் என்ற ஆசை தற்பெருமைக்கும் அகந்தைக்கும் இணையானது. இது ஈமான் - இறை நம்பிக்கைக்கே உலை வைக்கக்கூடியதாகும். இதனால்தான் பாராட்டுப் பெறும் ஆசை, முக்காடு அணிந்த இணைவைப்பு என்று வர்ணிக்கப்படுகின்றது.

இறைவனின் உவப்பை நாடியே மனிதன் செயலாற்ற வேண்டும் என்ற இறைவன் மீதும் மறுமையின் மீதும் வைத்திருக்கும் நம்பிக்கையைக் கோருகின்றது. எந்த ஒரு செயலுக்கும் உலக ஆதாயங்களை நோக்காகக் கொள்ளாமல் இறைவனிடம் இருந்து கிடைக்கும் நற்கூலியை மட்டுமே எதிர்பார்க்க வேண்டும். மறுமையில் கிடைக்க இருக்கும் வெகுமதிகளைப் பெறுவதே நம் நோக்கமாக இருக்க வேண்டும்.

ஆனால் ஒரு பகட்டு விரும்பியின் செயல் இதற்கு மாறாக இருக்கிறது. மக்களிடமிருந்து பெயர், புகழ், விருதுகள் பெறுவதையே அவன் நாடுகிறான். தனது செயலுக்கான பங்குகள், விருதுகள் இந்த உலகிலேயே கிடைத்துவிட வேண்டும் என விரும்புகின்றனர். இவனுடைய தொண்டுகள், சேவைகள் எதுவுமே இறைவனுக்காகவும் இல்லை, இறைவனை நோக்கியும் இல்லை, இறை மார்க்கத்தை நோக்கியும் இல்லை. ஆகவே இவன் செய்த தொண்டுகள் எவ்வளவு பெரிதாக இருந்தாலும் இறைவனின் மதிப்பீட்டில் அவை நற்செயல்களாகக் கணிக்கப்பட மாட்டாது.





# தம்மைத் தாமே தாழ்த்துவோர் உயர்த்தப்படுவார்

தாங்கள் நேர்மையானவர் என்று நம்பி மற்றவர்களை இகழ்ந்து ஒதுக்கும் சிலரைப் பார்த்து இயேசு இந்த உவமையைச் சொன்னார்.

'இருவர் இறைவனிடம் வேண்ட ஆலயத்துக்குச் சென்றனர். ஒருவர் பரிசேயர் மற்றவர் வரி தண்டுபவர். பரிசேயர் நின்றுகொண்டு இவ்வாறு இறைவனிடம் வேண்டினார்,

'கடவுளே! நான் கொள்ளையர், நேர்மையற்றவர், விபசாரர் போன்ற மற்ற மக்களைப் போலவோ, இந்த வரி தண்டுபவரைப் போலவோ இல்லாதது பற்றி உமக்கு நன்றி செலுத்துகிறேன். வாரத்தில் இருமுறை நோன்பிருக்கிறேன். என் வருவாயில் எல்லாம் பத்திலொரு பங்கைக் கொடுக்கிறேன்" என்றார்.

ஆனால் வரிதண்டுபவர் தொலைவில் நின்றுகொண்டு வானத்தை அண்ணாந்து பார்க்கக்கூட துணிவில்லாமல் தம் மார்பில் அடித்துக் கொண்டு, 'கடவுளே பாவியாகிய என் மீது இரக்கம் வையும்" என்றார்.

இவர்களில் பரிசேயரல்ல, வரிதண்டுபவரே கடவுளுக்கு ஏற்புடையவராகி வீடு திரும்பினார். ஏனெனில் தம்மைத் தாமே உயர்த்துபவர் தாழ்த்தப் பெறுவர், தம்மைத் தாமே தாழ்த்துவோர் உயர்த்தப் பெறுவர்" என நான் உங்களுக்கு கொல்கிறேன்" என்றார் இயேசு. (லூக்கா 18:9-14)

# எங்கள் நிலத்தை காணவில்லை

ஜெரா

"நாங்க 83ஆம் வருசத்தில இங்க இருந்து திடீரென வெளிக்கிட்டம். எல்லா பக்கமும் வெடிச்சத்தம். அம்மா, அப்பாவோட 3 சகோதரிகளுடன் எல்லாரும் ஓடினோம். எல்லாத்தையும் அப்பிடியே விட்டுட்டு ஓடிப்போனம். நெடுங்கேணி பள்ளிக்கூடம், வவுனியா, மெனிக்பாம் எண்டு இருந்து, பிறகு அப்பிடியே மன்னார் வழியா ராமேஸ்வரம் போயிட்டம். அங்க இருந்து 35 வருசத்துக்கு அப்புறமா இப்ப ஊருக்கு வந்திருக்கிறன். இப்ப நான் மட்டும் என்ரை குடும்பத்தோட தனியா. அம்மா, அப்பா, ஒரு சகோதரி எல்லாரும் இந்தியாவில இறந்திட்டாங்க. இன்னும் ரெண்டு சகோதரிகள் இந்தியாவில முகாமியே இருக்கிறாங்க. இங்க வந்தா எங்க வீடும் இல்ல, நிலமும் இல்லை என்கிறார் திருமதி வேலாயுதம்.

**நிலம் இல்லையா?**

ஆம் மருதோடை என்ற சிறிய கிராமம். வவுனியா வடக்கு பிரதேச செயலாளர் பிரிவின் எல்லையில் இருக்கிறது. யாரும் இலகுவில் சென்றடைந்துவிட முடியாதளவு தொலைவிலும் பயணிக்கமுடியாத ஒற்றையடிப்பாதைகளையும் கொண்டிருக்கிறது. இந்த மாதிரியான கிராமங்கள் அங்கு வாழ்பவர்களைத் தவிர வேறு மக்களின் கண்களில் படுவதே இல்லை. அதனால், அதிகளவில் ஊடக வெளிச்சமும் கிடைப்பதில்லை. நெடுங்கேணி சந்தியில் இருந்து முச்சக்கரவண்டியில் புறப்பட்டால் 1,000 ரூபாவுக்கு குறையாத தொகையும், காலை மற்றும் மாலை என மட்டுப்படுத்தப்பட்டிருக்கும் பேருந்தில் பயணித்தால் 90 ரூபாய்க்கு குறையாத தொகையும் கொண்ட தூரத்தில் இந்தக்கிராமம் உள்ளது.

மருதோடை. இங்கு எப்போதிலிருந்து தமிழர்கள் வாழ்கின்றனர் என்பதற்கான வரலாற்றுப் பதிவுகள் எவையும் தேடிப்பெறுவதற்கில்லை. ஆனால், வவுனியா மாவட்டத்தில் மிகத் தொன்மையான காலத்திலிருந்து இந்தக் கிராமத்தில் தமிழர்கள் வாழ்ந்து வருகின்றனர் என்பதும், வன்னி பெருநிலப்பரப்பு முழுவதும் பிரபலமான பரியாரி மரபொன்று இங்கிருந்ததென்பதும் விசாரித்து அறியக்கூடிய வரலாறாக இருக்கின்றது. 1967- 67ஆம் ஆண்டுகளில் இந்தக் கிராமத்துக்கு அருகில் உருவாக்கப்பட்ட டொலர் பாம், ஹென்பாம், சிலோன் தியேட்டர், தனிக்கல்லு முதலான பெரும் பண்ணைகள் பொருளாதார வலுவையும் விவசாய செழிப்பையும் அங்கு மேலோங்கச் செய்திருக்கின்றன.

1983ஆம் ஆண்டில் ஏற்படுத்தப்பட்ட பதவியா சிங்கள மக்கள் குடியேற்றத்தின் விளைவாக வவுனியா வடக்கின் எல்லைக்கிராமங்கள் தொடக்கம் முல்லைத்தீவின் கரைதுறைப்பற்று எல்லைக்கிராமங்கள் வரைக்கும் வன்முறைகள் இடம்பெற்றன. இதன் தொடர்ச்சியாக 1984இல் மகாவலி அபிவிருத்திச் சட்டத்தின் கீழ் வர்த்தமானி அறிவித்தல் மூலம் இப்பகுதிகளை விட்டு நிரந்தரமாகவே வெளியேற்றப்பட்டு விட்டனர். அப்படி வெளியேறியவர்களில் ஒருவர்தான் இந்த திருமதி வேலாயுதம்.

2009ஆம் ஆண்டில் போர் முடிவுக்கு வரும் வரைக்கும் இந்தப் பகுதிகள் சூனியப் பிரதேசமாகவே இருந்தன. 2011ஆம் ஆண்டிலேயே - 25 வருடங்களுக்குப் பின்னர் மக்களில் சிலர் ஊர் திரும்பினர். 2011 பலர் மீளத்திரும்பவில்லை. போரில் இறந்தவர்கள், காணாமல் ஆக்கப்பட்டவர்கள், இந்தியாவுக்குச் சென்றவர்கள், நாட்டின் ஏனைய மாவட்டங்களில் நிரந்தரமாக குடியேறியவர்கள் போக எஞ்சிய மிகச் சொற்பமான குடும்பங்களே அப்போது ஊர் திரும்பினர்.






அவ்வாறு ஊர் திரும்பியவர்கள் மருதோடை கிராமத்தின் ஆரம்பப் பகுதிக்குரியவர்களாக இருந்தனர். அவர்கள் தங்கள் காணிகளை திருத்தி, வீட்டுத்திட்டங்களைப் பெற்று, விவசாயத்தில் ஓரளவு செழிப்புற்று வாழ்ந்து வருகின்றனர். இப்போது இந்தியாவிலிருந்தும், நாட்டின் பிற மாவட்டங்களில் இருந்தும் தம் சொந்த கிராமத்துக்கு திரும்பியிருக்கும் கந்தன் சோமு போன்றோர் தங்கள் நிலங்களைத் தேடிவருகின்றனர். இந்த வருட ஆரம்பத்தில் இருந்து இதுவரை 37 குடும்பங்கள் இவ்வாறு தங்கள் சொந்த நிலங்களுக்கு திரும்பியுள்ளனர்.

இவ்வாறு வந்திருப்பவர்களில் அனேகரிடம் அவர்களின் காணிகள் தொடர்பான ஆவணங்கள் எவையும் இல்லை. போரிலும், இடப்பெயர்விலும் அனைத்தும் தவறிப்போனதாகக் கூறுகிறார்கள். அத்துடன், 35 வருடங்கள் என்பது இரண்டாவது சந்ததிக்கான காலம். இடம்பெயர்ந்து போகும்போது குழந்தைகளாகச் சென்றவர்கள் இப்போது குடும்பமாகி அவர்களுக்கும் குழந்தைகள் பிறந்துவிட்டனர். 40, 50 வயதுகளில் வந்து நிற்கின்றனர்.

அப்படியானவர்களில் ஒருவர்தான் திருமதி.வேலாயுதம். இந்தியாவிலிருந்து மருதோடை திரும்பியிருக்கிறார். தங்கள் நிலங்களைத் தேடிக்கொண்டிருக்கும் இவர்களிடம் அது பற்றி கதைத்தோம். "இங்க வந்தா எங்கட காணியில தோட்டம் செய்து பிழைக்கலாம் எண்டு நினைச்சம். இப்ப காணியே இல்லை. எங்கள் வீட்டில நாங்க நட்டிருந்த மரம், வெட்டின கிணறு, கட்டின மலசலகூடம் எண்டு அடையாளங்கள தேடினம். அதுவே கஸ்ரமாதான் இருந்துது. பிறகு ஒருமாதிரி கண்டுபிடிச்சிற்றம். ஆனா அது எங்களுக்கு இல்லையாம். அது அரசுக்கு சொந்தமான காடாம்" என்று கூறுகிறார் திருமதி வேலாயுதம்.

"35 வருசமா எங்களால இங்க இருக்க முடியேல்ல. அப்ப அது காடா மாறீற்று. அதுக்கு அது எங்கட நிலம் எண்டு இல்லாமல் போகுமே?" - 70 வயதைக் கொண்ட ரவி இரத்தினம். மருதோடை கிராமத்தின் மூத்தகுடிமகன். அவர் தனது கைகளைக் காட்டியவாறே,

"நான் தான் இளைஞனா இருக்கேக்க இந்தக் காட்டை என்ரை கையால வெட்டி காணியாக்கினன். இதுக்கு உறுதி கூட தந்திருந்தாங்க. இப்ப எல்லாமே கைவிட்டுப்போச்சி. இப்ப வந்து காணிய துப்பரவாக்கினா வன வள பாதுகாப்பு திணைக்களம் விடுறாங்க இல்ல. இதெல்லாம் பாதுகாக்கப்பட்ட காடாம்.


30 வருசத்துக்கு
இருந்து விவசாய
பாருங்க கிணறு
அப்படியே இரு
இருக்கு. இதெல்
எப்படி வரும்? ந
காடாகி அப்பிடி
நியாயம்?" மிகவு
அந்தப் பெரியவ
முன்வைக்கிறார்.

பக்கத்தில் ஒரு
சின்னக்கொட்ட
இந்தப்பெரியவர்
ஒதுங்கமுடியாது
கொட்டகை ஒன்
பிரதேச செயலக

"நாங்கள் இந்
இலங்கையில் வா
திரும்பி வாங்க எ
வந்ததும் சொந்த
இல்ல. இரவில
நித்திரை கொள்
தானே. ஒரே பா
ரெண்டு பாம்பு
ரவி.

அடர்ந்த காட்
பற்ற கொட்டில்
கல்வி, பொருளா
மீள்குடியேற்ற க
செய்துகொடுக்க
என மருதோடை
நீடிக்கிறது. இந்த
காணியே பறிபே
இருந்து மக்களை
அவர்களுக்கான
வழிவகைகளைச்

இந்த விடயம்
இடம்பெற்ற ஊ
மாநாடொன்றில்
அப்போதைய கூ
ஊடகப் பேச்சா
மேற்பட்ட வெளி
வவுனியா வடக்கி
கிராமத்தில் குடி
இது சட்டவிரோ
குறிப்பிட்டார்.
காரணமாக இட
மீளவும் அதே இ
நம்பி வந்தவர்க
குடியேறிகளின்



புக்கு முதல் நாங்க பூர்வீகமா
வசாயம் செய்த காணிகள் இது.
ணறுகள் கூட இடிஞ்சி போய்
இருக்கு. மலசல கூடங்கள்
தெல்லாம் காட்டுக்குள்ள
ம்? நாங்க நட்ட மரங்கள் கூட
ப்பிடியே நிற்குது? இது என்ன
மிகவும் மனவருத்தத்துடன்
ரியவர் தன்நிலையை
றார்.
ல் ஒரு சிறிய இடத்தில் ஒரு
ட்டகை கட்டி இருக்கும்
ியவர் பெரிய மழைவந்தால்
யாது. அவ்வளவு மிகச்சிறிய
க ஒன்று அமைக்கத்தான்
யலகம் உதவியுள்ளது.
இந்தியாவில் இருக்கும்போது
ில் வாழலாம், எல்லாரும்
ங்க எண்டு சொன்னாங்க. இங்க
ாந்தக் காணிக்குள்ள விடுறாங்க
வில பிள்ளைகளோட நிம்மதியா
ாள்ளக்கூட முடியுதில்ல. காடு
ர் பாம்பு. இன்றைக்கு கூட
ம்பு அடிச்சிட்டம்" என்கிறார்

காட்டுக்கு நடுவில் பாதுகாப்
டில்கள், சரியான சுகாதாரம்,
ருளாதாரம் உள்ளிட்ட
ற்ற கட்டுமான வசதிகள்
டுக்கப்படாத மீள்குடியேற்றம்
டை கிராம மக்களின் அவலம்
இந்த நிலையில், பலருக்கு
றிபோன நிலை. இந்தியாவில்
களை மீள வரவழைத்த அரசு
ான நிரந்தர குடியிருப்புக்கு
ளைச் சரியாகச் செய்யவில்லை.
யம் குறித்து கொழும்பில்
ஊடகவியலாளர்
ன்றில் கருத்துவெளியிட்ட
ய கூட்டு எதிரணியின்
ச்சாளர், "450க்கும்
வெளிநாட்டு வாசிகள்
க்கில் மருதோடை எனும்
குடியேறியிருக்கின்றனர்.
ிரோதமான செயல்" எனக்
ர். போர் நிலமைகள்
இடம்பெயர்ந்து சென்ற
ந இடத்துக்கு அரசின் வாக்கை
ர்களை வெளிநாட்டுக்
ின்குடியேற்றமாகப் பார்க்கும்

அரசியல்வாதிகளை என்னவென்று சொல்வது?

"இந்த லட்சணத்தில எப்பிடி நாங்க இந்தியாவில இருக்கும் சகோதரங்கள இங்க வரச்சொல்லி கூப்பிடுறது? ஏன்று ஆதங்கப்பட்டார் திருமதி வேலாயுதம்.

இவ்வாறு மீளக்குடியேற வந்தவர்களை திரிசங்கு சொர்க்கத்தில் நிறுத்தியது யார்?

"இந்தக் கிராமத்தில் மீள்குடியேறியிருக்கும் மக்களுக்கு பிரதேச செயலகம், பிரதேச சபை மற்றும் சில தொண்டு நிறுவனங்கள் மிகச் சொற்பமான உதவிகளையே செய்திருக்கு. பக்கத்து ஊர் மக்கள் உணவுப் பொருள், குடிநீர் உதவிகளைச் செய்யினம். ஆனால், பலம்பொருந்திய அரச திணைக்களமான வன வளத் திணைக்களம் இந்த மக்களை குடியேறவோ, தங்கட காணிகள துப்பரவாக்கவோ வேண்டாம் எனச் சொல்லியிருக்கு." என்கிறார் பெயர் சொல்ல விரும்பாத பிரதேச சபை உறுப்பினர் ஒருவர்.

**இதை நம்பி வந்தவர்களை என்னசெய்வது?**

"இப்பிடியொரு தடை இருக்கிறபடியால் இதை மீறி எந்த அரச திணைக்களங்களாலும் முழுமையான உதவிகளை இவர்களுக்கு வழங்க முடியாது" என்கிறார் அந்தப் பிரதேச சபை உறுப்பினர்.

மக்கள் குடியேறி இருந்த காணிகளை வனவள பாதுகாப்பு திணைக்களம் எப்படி கையகப்படுத்த முடியும்? அவர்களிடமே கேட்டோம்.

"கடந்த 2010ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட அரச வர்த்தமானியில் இப்போது பிரச்சினைக்குள்ளாகியிருக்கும் மருதோடை கிராமப் பகுதிகள் பாதுகாக்கப்பட்ட வனமாக பிரகடனம் செய்யப்பட்டுள்ளது. அப்போது நாடாளுமன்றத்திலோ வெளியிலோ இது பற்றிய யாரும் எதிர்ப்புக் கூறவில்லை. தமிழ் அரசியல்வாதிகள் கூட இதைப்பற்றி எதுவும் கதைக்கவில்லை. நாம் சட்டத்தை அமுல்படுத்தி நடைமுறைப்படுத்தி வருகிறோம். சட்டத்தை மீறி காடழிப்பதை நாம் அனுமதிக்க முடியாது" என்கிறார் இந்த விடயத்தைக் கையாளும் வனவளத் திணைக்களத்தை சார்ந்த அதிகாரி ஒருவர்.

மக்களுக்காக சட்டமா? சட்டத்திற்காக மக்களா? ●

# இப்படியும் ஒரு கொடுமை

## பசியால் தன் காலையே உணவாக்கிய நாய்

அமெரிக்காவில் செல்ல பிராணிகளுக்கு, அதிக மவுசு உண்டு. பெரும்பாலானோர் வீடுகளில் ஒன்றுக்கு மேற்பட்ட செல்ல பிராணிகளை வளர்ப்பார்கள். இதற்கு அமெரிக்க ஜனாதிபதிகள்கூட விதிவிலக்கல்ல. பல அமெரிக்க ஜனாதிபதிகள், தங்களின் வெளிநாட்டு பயணித்தின் போதும் தங்களுடன், நாய் உள்ளிட்ட செல்லப் பிராணியை அழைத்துச் செல்வதை வழக்கமாகக் கொண்டுள்ளனர்.

இதே நாட்டில்தான், யாரும் பார்த்திராத இந்தக் கொடுமையான சம்பவமும் நடந்துள்ளது. அமெரிக்காவின் தெற்கு கரோலினா பகுதியில் இருக்கும் ஒரு வீட்டில் இருந்து செல்ல பிராணிகளைப் பாதுகாக்கும் அமைப்பான "நோவா ஆர்க்ஸ்' அமைப்புக்கு ஒரு "போன்" வருகிறது. அதில் பேசியவர் சொன்ன தகவல், அவர்களை அதிர வைத்தது. தங்களின் அடுத்த வீட்டில் உள்ள ஒரு நாய், கட்டப்பட்ட நிலையில் உள்ளது. அந்த நாய் பசியால் தனது காலை கடித்து உண்ணுகிறது என அந்த நபர் தெரிவித்துள்ளார்.

இதனைத் தொடர்ந்து, உடனடியாக அந்த அமைப்பினர் அங்கு விரைந்தனர். அவர்கள் அங்கு சென்றபோது, அந்த நாய், தனது காலை பாதிக்கும் மேல் கடித்து உண்டு இருந்ததைக் கண்டு அதிர்ச்சி அடைந்தனர். உடனடியாக, அதற்கு உண வளித்து அங்கிருந்து மீட்டனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக அந்த அமைப்பின் செய்திதொடர்பாளர் கூறுகையில், "எங்களுக்குத் தகவல் கிடைத்து, அங்கு செல்லும்போது, அந்த நாயின் பாதிக் காலைக் காணவில்லை. அதன் அருகில் தண்ணியோ, உணவோ இல்லை. அது பரிதாபமான நிலையில் இருந்தது. அதன் பசி அதன் உடம்பில் தெரிந்தது. எத்தனை நாள்களாகச் சாப்பிடாமல் இருந்தது எனச் சரியாக சொல்லத் தெரியவில்லை.


எலும்பு வரை கடித்திருந்ததால், கடுமையாகப் பாதிக்கப்பட்டிருந்தது. அறுவைச் சிகிச்சை மூலம் தற்போது பாதிக்கப்பட்ட கால் அகற்றப்பட்டுள்ளது. தற்போது அந்த நாய் நல்ல உடல்நலத்துடன் உள்ளது. எங்களது சேவையில் பல மாதிரியான அனுபவங்களைச் சந்தித்திருக்கிறோம். பசி காரணமாக ஒல்லியாகக் குச்சி போன்று இருக்கும் நாய்கள் பலவற்றை மீட்டுள்ளோம். ஆனால், இப்படி ஒரு கொடுமையை, சமீப ஆண்டுகளில் பார்க்கவில்லை" என்றார்.

தற்போது அந்த நாய், தனது காயத்தில் இருந்து மீண்டு வருகிறது. அங்கு இருக்கும் மற்ற நாய்களுடன் அது கொஞ்சி விளையாடி வருவதாக, அந்த அமைப்பினர் தங்களது முகநூல் பக்கத்தில் தெரிவித்துள்ளனர். லூசிபர் என்ற இந்த நாயின் உரிமையாளர்களான ஜெசிக்கா ஜேம்ஸ் மற்றும் க்ராப்ட் ஆகியோர் மீது விலங்குகளை கொடுமைப்படுத்துதல் பிரிவின் கீழ் வழக்கு தொடரப்பட்டுள்ளது.



■ மன்னார் அமுதன்

# மனிதாபிமானிகள்...!



'மியாவ்...', 'மியாவ்...' என்று இடைவிடாது கேட்டுக் கொண்டேயிருந்த சத்தம், சர்வதேசத்தைப் போல நேரம் கிடைக்கும் போதெல்லாம் கூடிக் கதைக்கும் எங்கள் மனிதாபிமானம் தொடர்பான உரையாடலை இடைநிறுத்த மரக் கதிரையிலிருந்து எழும்பி வந்து ஜன்னல் வழியாக வெளியே எட்டிப் பார்த்தேன்.

தன் அம்மாவை எங்கேயோ தொலைத்துவிட்ட, அழகான வெள்ளைநிறப் பூனைக்குட்டி ஒன்று எங்கள் வீட்டின் கீழுள்ள சீனாக் கிழவியின் வீட்டிற்கு முன் நின்று கத்திக் கொண்டிருந்தது. அன்று முழுமதி தினம். ஞாயிற்றுக்கிழமை மத்தியானம் எங்கிறதால ரோட்டுல பெருசா சனம் இல்ல. எங்கள் குடியிருப்பு புறாக்கூடு மாதிரி. சதுரம், சதுரமா கட்டப்பட்ட அடுக்கு மாடிமனை. எங்கட முதலாவது மாடி என்கிறதால ஏறி இறங்க லேசு. பக்கத்துல, மேல, கீழ எண்டு நிறைய வீடுகள் இருந்தாலும் இரத்தம் மலிஞ்ச பூமி என்கிறதால யாரும், யாரோடும் பெருசா புழங்கிறது இல்ல.

மனசுல ஓர் அழுத்தத்தோட வாழுற மக்கள், படியில பார்த்தா மட்டும் சிரிச்சுக்குவாங்க. எங்கட பக்கத்து வீட்டில ஒரு அம்மம்மாவும், அவட அம்பது வயசு மகளும் இருக்குறாங்க. கீழ்வீட்டில சீனாக்கிழவி தன் மகள், பேரப்பிள்ளைகளோட வாழுறா. அவ சின்னப் பிள்ளையா இருந்தப்ப சீனாவுல இருந்தாவாம், அதனால எல்லாரும் அவவ சீனாக்கிழவி எண்டு சொல்லுவாங்க. 'ஐயோ பாவம், அழகான வெள்ளைக் குட்டி' எண்டு நினைச்சுக் கொண்டிருக்கையிலேயே, தமிழ் தொலைக்காட்சியில 'நியூஸ் அலேர்ட்' லோகோ சுத்திக் கொண்டு வரவும் சரியாக இருந்தது. பூனைக்குட்டியிலிருந்த கவனம் டீவியை நோக்கித் திரும்பியது.

'இவன்கள், இந்த ரீ.வியை வச்சுக் கொண்டுபடுறபாடு. இந்த வீணாப் போன விளம்பரங்களையும், இதையும் தானே சுத்திச் சுத்திக் காட்டுறான்கள். ஒரு பாட்டையாவது முழுசாப் போடுறான்களா? ரெலிபோன் கதைக்கிறப்போ சொல்லெண்டா தம்பி' என்று வசைபாடிக் கொண்டே பக்கத்து வீட்டு அம்மம்மா எழும்பினா. செய்தி போற நேரம் தான் அவக்கு இடைவேளை. அந்த நேரம் அவட அவசர, அவசிய வேலைகளை முடித்துக் கொண்டு திரும்பவும் நிகழ்ச்சி தொடங்க, வந்திருந்து பார்ப்பது வழக்கம். அவங்கட வீட்டில ரீவி இருந்தாலும், தனியா இருந்து பார்க்க அம்மம்மாவுக்குப் பிடிக்கிறதில்லை.

நியூஸ் அலேர்ட்டில வன்னியிலிருந்து வந்து குவியிற மக்களைக் காட்டுறப்ப கண்ணுக்குள்ள இருந்து முட்டக் கண்ணீர்த் துளி இரண்டு நிலத்தில விழுந்து தெறித்தது. தாயில்லாம, தகப்பனில்லாம, ஒவ்வொரு உயிரும், மற்றொரு துணையை யிழந்து, இழக்கிறதுக்கும், தொலைக்கிறதுக்கும் ஒண்ணுமில்லாத சீவன்கள் கை, கால்களை இழந்து கீழ கத்திக்கொண்டிருக்கும் பூனைக்குட்டி மாதிரி அநாதரவாய் நிற்கிறதப் பார்த்தா யாருக்குத் தான் துக்கம் தொண்டையை அடைக்காது. வன்னிப் பெருநிலத்தின் மக்கள் நிலையைக் கண்ட சனமெல்லாம் ஒரே அதே கதையைக் கதைத்துக் கொண்டு ரோட்டுல இங்கையும் அங்கையும் கூடிக் கூடிக் கதைக்குதுகள். பூனைக்குட்டியும் போறவாற ஆக்களுக்குப் பின்னால இங்கையும் அங்கையும் கத்திக்கொண்டே ஓடித்திரிந்தது.

எங்கட மனிதாபிமானக் கதைகள் வன்னி மக்களையும் கடந்து, கடல் கடந்து எதியோப்பியா வரை போய் முடிகையில் பூனைக்குட்டி உச்ச ஸ்தாயில் கத்திக் கொண்டிருந்தது. பின்னேரம் ஆறு மணியும் ஆயிட்டு. மின்னல் வெட்டோடும், இடிச் சத்தத்தோடும் அரசியல் நிகழ்ச்சியொன்று ரீவியில தொடங்க வெளியில மழையும் தூறத் தொடங்கியது. அந்நிகழ்ச்சியில் 'டிங் டாங்' சின்னத்தில் எலக்சன் கேட்ட பச்சோந்தி சேகர் சிறப்பு அதிதியாகக் கலந்துகொண்டு வன்னி மக்களுக்கு தனது நீலிக்கண்ணீரை சமர்ப்பணம் செய்து கொண்டிருந்தான். இதைப் பார்த்துக் கொண்டிருந்த அம்மம்மா '83 கலவர நேரம் பல தோட்டங்களை எரிச்சதுக்கு இவனுக்கு பரிசாக் கிடைச்சதுதானாம் இந்த பதவி, பவுசெல்லாம். ஆடு நனையுதுன்னு ஏன் இந்த ஓநாய் அழுகுது?' எண்டு தன் வயிற்றெரிச்சலைக் கொட்டித் தீர்த்தா.

கடைசி வார்த்தையைக் கேட்டதும் மண்டைக்குள்ள பொறிதட்ட பூனைக்குட்டி நனையுதோன்னு எட்டிப் பார்த்தேன். தொப்பலா நனஞ்சு போய், எல்லாத்தையும் இழந்த தமிழ்ச்சனம் மாதிரி கூனிக் குறுகி களைச்சுப் போய் நிக்குது. கொஞ்சம் உசாரானதும், குடை பிடிச்சுக்கொண்டு போற வார ஆக்களுக்குப் பின்னால எல்லாம் கத்திக்கொண்டே ஓடித்திரியுது.

பொறுமையிழந்து படிகளில் இறங்கி ஓடிப்போய் சீனாக் கிழவியின் வீட்டிற்கு முன் நின்ற பூனைக்குட்டியைத் தூக்கிக் கொண்டுவந்து மெதுவாகத் துவட்டி விட்டு, பாலைக் கரைத்துக் குடிக்கக் கொடுத்தேன். குட்டிக்கு பாலைக் குடிக்கக் கூடத் தெரியலை. பால் மூக்குக்குள்ள போக, கொஞ்ச நேரம் தும்மியது. மத்தியானத்தில இருந்து அது ஒண்டும் சாப்பிடாததாலயோ, இல்ல சுத்தியும் ஆக்களப் பார்த்த பயத்தினாலயோ தெரியல. இன்னும் சத்தமாகக் கத்தித் தொலைத்தது. பூனைக் குட்டியோடு மல்லுக் கட்டிக் கொண்டிருக்கையில் 'டொக்... டொக்' என்று கதவு தட்டும் சத்தம் கேக்க முன்னறைக்குப் போய் திறந்து பார்த்தால், கீழ்வீட்டு சீனாக்கிழவி.

'வாங்க ஆச்சி, என்ன இந்த நேரத்தில' என்றேன்.

'பூனைக்குட்டி வளக்கிறீங்களா மகன்?' என்று சகோதர மொழியில் கேட்டவாறே உள்ளே வந்தா. இவ கதைச்சது, குட்டிக்கு விளங்கியது போல கதவருகே கத்திக்கொண்டே ஓடி வந்தது. 'நீங்க வளருங்க தம்பி, எங்களுக்கு ஒரு பிரச்சினையும் இல்ல. ஆனா இதைச் சத்தம் போட வேணாமெண்டு சொல்லுங்க, எங்களுக்கு இரவைக்கு நித்திரை கொள்ள முடியாது. அப்படிச் செய்ய முடியாட்டி வேறெங்கயாவது கொண்டுபோய் விட்டிருங்க" என்று தொடர்ந்தாள்.

'என்னது பூனைக்குட்டி நாங்க வளக்குறோமா?' எனக்குள் எழுந்த கோபத்தை வெளிப்படுத்த முனைகையில், அம்மம்மாவும் என் கையைப் புடிச்சுச் சொன்னா 'விட்டிடு மகன். இதுக்கு சாப்பிடக் கூடத் தெரியல்ல. எப்பிடிடா வளர்ப்பாய்"

மத்தியானத்திலிருந்து மனிதாபிமானத்தை பற்றி விளாசித் தள்ளிக் கொண்டிருந்த எனது நண்பர்களும் 'ஓம் மச்சான்' என்று வழிமொழிய பத்திரமாகக் கீழே கொண்டு போய் வேறு இரண்டு பெரிய பூனைகளுக்கு அருகில் விட்டு வந்து ஜன்னல் வழியே பார்த்துக் கொண்டு நின்றேன். ஒரு பூனை மெதுவாக வந்து குட்டியை மணந்து பார்த்து, தன் நாக்கால் வருடிக் கொடுத்துக் கொண்டிருக்கையிலேயே எங்கிருந்தோ பாய்ந்து வந்த வெறிபிடித்த தெருநாய் டக்கென்று குட்டியின் கழுத்தைக் கௌவி ஒரு உலுப்பு உலுப்பியது.

பூனைக்குட்டி, ஒரு சிறு குழந்தையின் குரலை ஒத்த ஓசையுடன் கத்தி ஓய்ந்தது. ஒரு கிழிந்த வெல்வெட் துணியில் சிவப்பு மையை ஊற்றியது போல கிடந்த அதன் உடலில் மெல்ல மெல்ல மூச்சு என் கண் முன்னால் அடங்கியது. இப்போது மனிதாபிமானிகள் பலர் மழைக்குள் குடைபிடித்த படியே பூனைக்குட்டியைச் சுற்றி நின்று தங்களுக்குள் மனிதாபிமானக் கருத்துக்களைப் பகிர்ந்துகொள்கிறார்கள். சீனாக் கிழவி 'உச்' கொட்டிக் கொண்டே மேல் நோக்கிப் பார்த்தா. ஜன்னலருகே கண்ணீரோடு நின்ற என்னட்ட சொன்னா 'மகன், நீங்க வளர்த்த பூனைக்குட்டி தான் எங்கட வீட்டுக்கு முன்னால செத்துக் கிடக்குது, இதை அப்புறப்படுத்துங்கள்" என்று...

ரீவியில மறுபடியும் 'நியூஸ் அலேர்ட்' லோகோ சுத்திக்கொண்டு வருகிறது. ●

தொகுப்பு: ஏ.ஜே.ஞானேந்திரன்



# எந்தக் கடவுச்சீட்டு அதி பலசாலி?


குத்துச் சண்டை மோதல்கள் போல, யார் பலசாலி என்று அறிய கடவுச்சீட்டுகளும் ஒன்றோடு ஒன்று மோதிக் கொள்கின்றன போலும். இந்த ஆண்டின் ஆரம்பத்தில், ஐரோப்பிய நாடான ஜேர்மனிதான் பலசாலியாகத் திகழ்ந்தது. ஆனால் பின்னர் ஆசிய நாடான சிங்கப்பூர், ஜேர்மனியை மண்கௌவ வைத்தது. இப்போது, வருட முடிவில் ஜப்பான் சிங்கப்பூரை ஓரங்கட்டி இருக்கின்றது.

அதெப்படி ஒரு கடவுச்சீட்டின் பலத்தைத் தீர்மானிப்பது என்று கேட்கிறீர்களா? ஒரு கடவுச்சீட்டை வைத்துக்கொண்டு நீங்கள் எத்தனை நாடுகளுக்குள் விசா இன்றி அல்லது அங்கே உள்நுழையும்போது விசா பெறமுடிதல் ஆகியவற்றைக் கொண்டே பலம் தீர்மானிக்கப்படுகின்றது. ஒக்ரோபர் மாதம் மியான்மாருக்கு விசா இன்றி பயணமாகலாம் என்று முடிவெடுத்த பின்பு, ஜப்பானிய கடவுச்சீட்டுடன் 190 நாடுகளுக்கு விசாப் பிரச்சினை இல்லாது போய்வர முடியும். இதனால் உலக நாடுகளின் "சம்பியனாகின்றது " ஜப்பான்.

இரண்டாவது இடம் சிங்கப்பூர்(189நாடுகள்). ஜேர்மனியை ஓரங்கட்டி மூன்றாம் இடத்தைக் கொடுத்து விட்டு, ஆசிய நாடுகளான ஜப்பானும், சிங்கப்பூரும் முதலாம் இரண்டாம் இடங்களைப் பிடித்துள்ளன. ஜேர்மனியைப் போல 188 நாடுகளுடன் பிரான்ஸ், தென் கொரியா ஆகிய நாடுகளும் மூன்றாம் இடத்தைப் பிடித்துள்ளன. அப்படிப் பார்க்கும்போது, முதல் மூன்று இடங்களையும் மூன்று ஆசிய நாடுகள் பெற்றமை ஆச்சரியத்தை அளிக்கின்றது.

**பலவான்களுக்கு பலவான்கள்**
**பிறந்து கொண்டுதான் இருக்கிறார்கள்**

# வெளிச்சத்துக்கு வந்த வேண்டப்படாத வேகம்




ஒன்றா இரண்டா எடுத்துச் சொல்ல? மொத்தம் 58,000 பேர் இரண்டு வார காலத்தில், சாலைகளில் விதிக்கப்பட்ட வேகத்தை மீறி ஓடியது, கமெராக்கள் உபயத்தால் வெளிச்சத்துக்கு வந்துள்ளன. இது எங்கே என்று கேட்கிறீர்களா?

இத்தாலியின் ஒரு குக்கிராமத்தில்தான் இந்த வேக மீறல் இடம்பெற்றுள்ளது. இத்தாலியின் வட பகுதியில், பிரான்ஸ் எல்லையை ஒட்டி அமைந்த கிராமம் இது. செப்ரெம்பர் 13 - 27 காலப்பகுதிக்கு இடையில் கமெராக்களில் பதிவாகிய புள்ளி விவரங்களைக் கொண்டுதான் இந்தக் கணக்கெடுப்பு நடந்துள்ளது. மணிக்கு 50கி. மீ. என்ற வலயத்துள், 3 நிமிடங்களுக்கு ஒரு தடவை இந்த "அத்துமீறல்கள்" பதிவாகி உள்ளன என்று கண்டுள்ளார்கள்.

இதில் மிக மோசமான பதிவு மணிக்கு 136கி.மீ. என்று அசுர வேகத்தில் ஓடியதுதான்! அசுர வேக ஓட்டக்காரர்கள் 20 பேர், மக்கள் நடமாட்டம் அதிகமுள்ள மதிய வேளையில், இப்படியொரு வேகத்தில் தமது வாகனங்களை ஓட்டியிருப்பது அதிகாரிகளை மிரளச் செய்துள்ளது.

**எங்கும் வேகம் எதிலும் வேகம்**

# ஒரேயொரு பேப்பர் திருட்டு தண்டமோ 2.5 இலட்சம்




ஆச்சரியம் ஆனால் உண்மை. ஒரு ரோல் ரொய்லெட் பேப்பரைத் திருடிய குற்றத்திற்காக தண்டப் பணமாக சுமாராக இரண்டரை இலட்சம் ரூபா தொகையை தண்டப் பணமாகச் செலுத்தும்படி தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது. இதில் சம்பந்தப்பட்டவர் பதவி ஓய்வு பெற்ற ஒரு ஜப்பானியர்.

ஜப்பானின் ஒக்கினோஷிமா மருத்துவமனையிலிருந்து ரொய்லெட் பேப்பர் திருடியதுதான் இவர் செய்த குற்றம். ஜப்பானின் மேற்குக் கரையோரம் ஷிமானே பிராந்தியத்தில் ஒரு தீவின் பெயர்தான் ஒக்கினோஷிமா. உள்ளூரில் வெறும் 30 யென்னுக்கு வாங்கக்கூடிய ஒரு ரொய்லெட் றோலுக்கு 200,000 யென் தண்டப் பணம் கட்டியிருக்கிறார் இந்த முதியவர்.

இந்தத் தண்டம் பற்றி பரவலாக காரசாரமான விவாதங்கள் கிளம்பியுள்ளன. வயதாளிகள் அதிகரிப்பதும், இவர்களில் பலர் வறுமையில் வாடுவதும் ஜப்பானில்அதிகரித்து வருகிறது. 2016 இல் கணக்கெடுப்பில், சிறையில் இருப்பவர்களில் 12 வீதமானவர்கள் 65 வயதைக் கடந்தவர்கள் என்று கண்டறியப்பட்டுள்ளது. சில்லறைத் திருட்டுக்களில் ஈடுபட்டுத்தான் இந்த வயதாளிகள் கம்பி எண்ணுகிறார்களாம்...!

**புருட்டஸ் நீயுமா?... அன்று கேட்டது**
**ஜப்பான் நீயுமா?.... இன்று கேட்பது**

# 1400 கிலோ எடையில் ஒரு இராட்சதக் காளை



பூனைகளிடையே யானையா என்று கேட்கத் தோன்றுமளவிற்கு, சாதாரண காளைகளிடையே, இராட்சத அளவில் ஒரு காளை நிற்பது பலரையும் வியப்புக்கு உள்ளாக்கி இருக்கின்றது. இறைச்சிக்கு வெட்ட முடியாத அளவு இது அளவில் மிகப் பெரிதாக இருக்கின்றது என்று எல்லோருமே தட்டிக் கழிக்க, வெட்டப்படாத மரம் போல, அந்தக் காளையும் வேகமாக வளர்ந்து வருகின்றது.

இதனுடைய உயரம் 194 செ.மீற்றர். எடை 1400 கிலோ. அவுஸ்திரேலியாவின் மையால என்ற பண்ணையில்தான் இது வளர்ந்து வருகின்றது. புதுமையான அளவில் உள்ள இந்த மிருகத்தின் படத்தை இணையத்தில் அடிக்கடி பலர் பிரசுரிப்பதால் அது "உலகப் புகழ்" பெற்று விட்ட ஒரு காளையாக மாறியுள்ளது. மில்லியன் கணக்கான காளைகளைக் கொண்ட இந்த நாட்டில், "நிக்கேர்ஸ்" என்று அழைக்கப்படும் இந்தக் காளைதான் அளவில் மிகப் பெரியது என்று சொல்லப்படுகின்றது.

இது நிஜத்தில் உயிரோடு உள்ள ஒரு காளைதானா அல்லது, "போட்டோ ஷொப்பின்" உபயமா என்று கூட பலர் கேட்கத் தொடங்கியிருக்கிறார்கள். பொதுவாகவே இந்த இனங்கள் அளவில் பெரிதாக வளர்பவை. ஒரு வளர்ந்த காளையின் சராசரி உயரம் 147 செ.மீ. "ஹொல்ஸ்ரைன் பிரீசியன்ஸ்" என்று இந்த இனம் அழைக்கப்படுகின்றது. சமீபத்தில் ஏலத்தில் இந்தக் காளையின் சொந்தக்காரர் இதை விற்க முயன்றும், மாமிசம் கடினம் என்றோ அல்லது வேறு காரணங்களுக்காக யாருமே இதை விலைக்கு வாங்கவில்லை.

20,000 மாடுகளுக்கு சொந்தக்காரரான பியர்ஸன் என்பவர் இந்தக் காளைக்கு வயது 12 மாதங்களாக இருக்கும்போது 400 டொலருக்கு இதை வாங்கினாராம். இப்பொழுது அதன் வயது 7 வருடங்கள். இன்னும் கொஞ்சம் வளரட்டும் வளரட்டும் என்று விட்டு வைக்கப் போய், இன்று அளவுக்கு மீறி வளர்ந்து விட்டதே என்று ஆதங்கப்படுகிறார் பண்ணையாளர்.

**வளர்ந்து கெட்ட கதை இதுதானோ?**

# புள்ளினங்களின் ஓலங்கள்

## ஏன் நமக்கு கேட்பதில்லை...?





புல்தரையில் படிந்திருந்த இரத்தக்கறை அன்று அங்கு நடந்த கொலைக்கு நீதி கேட்டுக் கொண்டிருந்தது. ஓடும் வேகத்தில் உருளும் சக்கரத்துக்கு அடியில் ஏற்பட்ட இழவு யார் கண்ணிலும் படவில்லை. பார்த்தவர்களுக்கும் நின்று வருந்த நேரமில்லை. தன்னால் வாழ்பவர்கள் மத்தியில், அவர்களுக்கு மகத்தான சேவை புரிந்தவளின் குழந்தை நசுங்கிச் சிதைந்தபோது அவள் என்ன நினைத்திருப்பாள் மரண ஓலமிடக்கூட நேரமின்றி இரத்தம் தெறித்துச் சிதறியபோது அந்தத் தாய்க்கு எப்படியிருந்திருக்கும் முதிர்ச்சியடையாத குரலில் அலறிய அந்தக் கடைசிக் கீச்சொலி கேட்டபோது அவள் எப்படிப் பதறியிருப்பாள்?

கோடையில் வறண்டிருக்கும் நீர்நிலைகள் எனக்கு எப்போதுமே ஒருவித வெறுப்பை உண்டாக்கும். நீரின்றிக் காய்ந்திருக்கும் அப்படியொரு வெற்று நிலம்தானே அன்று நடந்த அந்த இழவுக்குக் காரணமாக அமைந்தது. இதுபோன்ற காய்ந்த நீர்நிலைகள் இன்னும் எத்தனை இருக்கும், அவற்றில் இப்படியான இழவுகள் இன்னும் எத்தனை எத்தனை நடந்திருக்கும். அங்கு விளையாடச் செல்பவர்களுக்கோ அதைச் சாலையாக்கிப் பயன்படுத்தும் மனிதர்களுக்கோ அது வெறும் நிலம். அவளுக்கு அதுதானே வீடு. அங்குதானே அவள் தன்னை ஈர்த்தவனோடு கூடிக்களித்துக் காமத்தில் திளைத்துத் தாய்மை எய்தியிருப்பாள்? இடப்போகும் அந்த முட்டைகளுக்காகத் தன் இணையின் உதவியோடு பார்த்துப் பார்த்துக் கூடு கட்டியிருப்பாள். கூடு கட்டும்போது என்ன நினைத்திருப்பாள், தன் முட்டையிலிருந்து வெளியேறப் போகும் அந்தப் பிஞ்சுகளுக்கு இரையூட்டப் போகும் நாளை எதிர்நோக்கி எவ்வளவு பூரித்திருப்பாள்?

நினைத்திருப்பாள் - பூரித்திருப்பாள் - பதறியிருப்பாள் - ஏங்கியிருப்பாள். இந்தப் 'பாள்'களைப் பற்றிக் கவலைப்படாதவர்கள் நாம். ஏனென்றால் நம்மைப் பொறுத்தவரை அவள் வெறும் 'அது' மட்டுமே. மனிதரல்லாத மற்றவைக்கு நாம் மொழியில் காட்டிய வேற்றுமைகளையே உயிர்களுக்கான மதிப்பிலும்கூட காட்டுவது வேதனை. 'மனித' வளர்ச்சிக்கு வித்திடும் பல திட்டங்கள் எத்தனை கோடிப் புள்ளினங்கள் அழிவதற்கு வித்திட்டது என்ற கேள்வியை நமக்கு நாமே கேட்டுக்கொள்ள வேண்டும். நிலமொன்று காலியாகக் கிடந்தால் அதை மனிதப் பயன்பாட்டுக்குக் கொண்டுவரவே நினைக்கின்றோம். அந்த நினைப்பு எத்தனை ஆயிரம் புள்ளினங்கள் அழியக் காரணமானது என்பதெல்லாம் நமக்குத் தேவையில்லாதது.

புல்வெளிகளோடு ஒரு நிலமிருந்தால் நம்மைப் பொறுத்தவரை அது வெற்று நிலம் அல்லது புறம்போக்கு நிலம். அந்த நிலத்தைச் சுத்தப்படுத்துகிறேன் என்ற பேர்வழியில் அங்கிருக்கும் புற்களை, புதர்செடிகளை அறுத்தெரிந்து விடுகிறோம். அப்போதுதானே அதைப் பயன்படுத்த முடியும். நாம் அறுத்தெறிவது வெறும் புற்களையல்ல அதையே நம்பியிருக்கும், தன் வாரிசுகளின் வரவை எதிர்நோக்கிக் காத்திருக்கும் எத்தனையோ புள்ளினங்களின் எதிர்பார்ப்புகளை.

அவள் ஆள்காட்டிப் பறவை. பாலை நிலப்பறவையாகச் சங்க இலக்கியங்களில் கணந்துள் என்று சுட்டிக்காட்டப்பட்டவள். கோடையில் வறண்டு கிடக்கும் நீர்நிலைகளின் தரைகள் நிலத்தடி நீர் இருப்பால் ஈரப்பதம் கொண்டிருக்கும். அந்த ஈரப்பதம் அங்கு புல்வெளிகளை வளர்க்கும். அங்குதான் அவளைப் போன்றவர்கள் கூடுகட்டிப் பேரானந்தமாக வாழ்ந்தார்கள். அவர்களைப் போலவே வாழ வேண்டுமென்ற கனவுகளோடுதானே அவளும் இருந்தாள்.

நிலத்தில் கூடுகட்டி முட்டையிட்டுக் குஞ்சுபொரிக்கும் ஆள்காட்டி, இரவுப்பக்கி போன்ற பறவைகள் முற்றிலும் நம்பியிருப்பது அந்தப் புல்வெளிகளைத்தான். அங்கு கூடுகட்டி இனப்பெருக்கம் செய்து அங்கேயே தங்கள் குஞ்சுகளுக்குத் தேவையான பூச்சி புழுக்களைச் சேகரித்து ஊட்டி வளர்க்கின்றன. வளர்ந்த தன் குழந்தைகளை விட்டுப் பிரிந்து அதன் வாழ்க்கையை அதுவே தீர்மானிப்பதற்கான உரிமையை, சுயமாக வாழ்வதற்கான வாய்ப்பைக் கொடுக்கும் அந்தப் பக்குவம், அந்தப் பகுத்தறிவு அவற்றுக்கு எப்படி வந்தது? அப்படியான எதிர்பார்ப்புகளோடு தன் குழந்தையின் ஜனனத்துக்காகக் காத்திருந்தவள்தான் அவள்.

அவளைப் போலவே நம்மைச் சுற்றித் தினம் தினம் நூற்றுக்கணக்கான புள்ளினங்கள் தாம் தாய்மை அடைந்த சுகத்தைச் சுவைப்பதற்கு முன்னமே, அவற்றின் குஞ்சுகளை வளர்ச்சிப் போதையில் மயங்கியுள்ள மனிதக் காலன்கள் சுவைத்துவிடுகின்றனர். அந்த அம்மாக்களும் அதைக் கண்டபிறகு வழியாத கண்ணீரோடும் வெளித் தெரியாத வேதனையோடும் தான் வாழ்கின்றன. அத்தகையதொரு படுகொலையை அன்று பார்த்தபோது ஏற்பட்ட வேதனை என் நெஞ்சுக்குழிக்குள் நுழைந்து துருத்திக் கொண்டேயிருக்கிறது.

மனிதர்கள் நெடும் பயணம் மேற்கொள்கையில் வழியில் காத்திருக்கும் கொள்ளையர்களின் பேராசைக்கு இரையானார்கள். பேராசைக்குப் பலியானவர்களின் மரண ஓலங்களும், தங்கள் மேல் தெறித்த இரத்தத் துளிகளும் அவற்றை ஆள்காட்டிகளாக மாற்றின. மனித இரத்தம் சிந்துவதை விரும்பாத அந்த உன்னதப் புள்ளினங்கள் கொள்ளைக்காரர்கள் வழியில் மறைந்திருந்தால் பயணிகளுக்குக் குரல்கொடுத்துக் குறிப்பால் உணர்த்தின. அந்தக் குறிப்பை உணர்ந்து மனிதர்கள் தங்களைத் தற்காத்துக் கொண்டனர். அத்தகைய ஆபத்துதவிகள் இன்று அதே மனிதர்களின் பேராசைக்கு ரத்தம் சிந்திக் கொண்டிருக்கின்றன. ஆனால், அவற்றின் மரண ஓலங்கள் நம் காதுகளில் விழுவதில்லை. நம் மீது இரத்தம் தெறிப்பதில்லை.

ஆள்காட்டியைப் போன்றதுதான் இரவுப்பக்கி. இரவில் அவளின் அழைப்பின்றித் தூங்கமுடியாமல் மனம் போராடித் துடிக்கிறது. மனம் ஒவ்வொரு வறண்ட நீர்நிலையைப் பார்க்கும்போதும், 'இன்று எத்தனை இரவுப் பக்கிகளின் கூடுகள் சிதைந்தனவோ! இன்று எத்தனை குஞ்சுகளின் உயிர்கள் பிரிந்தனவோ" என்று ஏங்குகிறேன்.

பறவைகளைப் பார்க்கத் தொடங்கிவிட்டாலே அவை சார்ந்த வாழிடங்களைப் பற்றி அறிந்துகொள்வோம். அந்த வாழிடங்களின் முக்கியத்துவத்தைத் தெரிந்துகொள்வோம். ஓரிடத்தின் சூழலியல் முக்கியத்துவம் புரிந்த பின்னரும் அதன் அழிவை யாராலும் வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்க முடியாது. இவ்வளவுக்கும் வித்திடும் பறவை நோக்குதலை அன்று தொடங்கி வைத்தது என்னவோ வல்லூறுதான். அது ஆள்காட்டியில் நிலைகொண்டு வெள்ளைக்கண் வைரிக்கு விருந்தாக வேண்டியிருந்து தப்பித்த சாரையிடம் திசைமாறிப் பிறகு சிட்டுகளின் பக்கம் திரும்பி விட்டது. புதர்சிட்டு, கரிச்சாங்குருவி, தவிட்டுக்குருவி, கருப்பு வெள்ளைக் குருவி, வானம்பாடி, தையல் சிட்டு, பஞ்சுருட்டான், செம்பூத்து என்று வழக்குமொழியில் அழைக்கப்படும் செண்பகக் குயில், தேன் சிட்டு, வயல் நெட்டைக்காலி என்று எத்தனை வகைச் சிட்டுகள் அங்கே குடிகொண்டுள்ளன. இத்தனையும் புல்வெளிகளிலும் புதர்காடுகளிலும் வாழ்பவை. அவற்றின் இனப்பெருக்கம் மொத்தமும் வறண்டுகிடந்த அந்தச் சிறுதாவூர் ஏரியைச் சார்ந்ததே. அந்த ஏரி கோடையில் வறண்ட சமயங்களில் வளரும் புதர்களிலும் புற்களிலும்தான் இவையெல்லாமே கூடுகட்டி இணைதேடித் தன் வம்சத்தைப் பெருக்குகின்றன.

# வன்முறையற்ற சமூகம் நோக்கி...!

## (காண்பியக்கலை கண்காட்சி பற்றி...!)


ர.சிவதர்சினி




உலகை பெண்களுக்கு எதிரான வன்முறைகளற்றதாக மீளுருவாக்கம் செய்வோம்...! வன்முறைகளற்ற வாழ்வைக் கொண்டாடுவோம்...!!

நாம் அனைவரும் இயற்கையா கவே அன்பானவர்கள். பிறக்கையில் எந்தக் குழந்தையும் வன்முறையாளனாகப் பிறப்பதில்லை. ஒரு நபரின் செயற்பாடுகள், அவரின் பாரம்பரிய காரணிகளாலும் வளர்ப்புச் சூழலாலும் செல்வாக்குச் செலுத்தப்படுகின்றது. அந்த வகையில் வாழும் சூழல் மற்றும் சமூகத்தின் பங்காளர்களாகவும், இன்றியமையாதவர்களாகவும் இருந்து வரும் நாம், சமூகத்தில் இடம்பெறும் வன்முறைகளுக்கு பெரும் பங்காளர்களாகவும் உள்ளோம் என்பதே கசப்பான உண்மை.

உலகில் பெண்களுக்கு மிகவும் ஆபத்தான இடமாக குடும்பமே இருப்பதாக ஐக்கிய நாடுகள் சபையின் அறிக்கையொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது. 2017 இல் உலகம் முழுவதும் 87,000 பெண்கள் கொலை செய்யப்பட்டுள்ளதாகவும் இதில் சரி பாதிக்கும் மேல் 58 வீதமாகும் அல்லது 50,000 பெண்கள் தமக்கு நெருக்கமானவர்களாலேயோ அல்லது குடும்ப உறவினர்களாலேயோதான் கொலை செய்யப்பட்டுள்ளனர் என இவ்வறிக்கை





தெரிவிக்கின்றது. தினமும் 137 பெண்கள் தாம் நம்பும் நபரின் கையால் கொலை செய்யப்படுகின்றனர்.

ஒருவர் வன்முறையாளனாக உருவாகப் பல காரணங்கள் உண்டென்ற போதிலும் மிகப் பிரதானமான காரணமாக அமைவது நமது பண்பாடுகளும் கலாசாரமும் பெண்களுக்கு எதிராக வாரியிறைக்கும் பாரபட்சங்களுமேயாகும். பல சமயங்களில் பெண்களுக்கெதிரான வன்முறைகளையும் வன்முறையாளரையும் குடும்பச் சூழலும் சமூகமும் நியாயப்படுத்துவதை நாம் கண்கூடாகக் காணக்கூடியதாக இருக்கும்.

இத்தகைய போக்கு தற்போது உருவானல்ல. பல்லாண்டு காலமாக நமக்குள் தெரிந்தும் தெரியாமலும் சமூக கலாச்சாரமாக பண்பாட்டின் பகுதியாக நம்மை அறியாமலேயே திணிக்கப்பட்டுக் கொண்டும் மீண்டும் மீண்டும் வலியுறுத்தப்பட்டுக் கொண்டும் இருக்கின்றன. இதன் காரணமாக பெண்களுக்கு எதிரான வன்முறைகள் எத்தகையதாயினும் அது பெண்களின் சுதந்திரமான, மகிழ்ச்சியான வாழ்விற்கு தடையாய் அமைகின்றது என்பதையும் அது நியாயமற்றது என்பதையும் பிரித்தறியும், விளங்கிக்கொள்ளும் திறனை நம் சமூகம் இழந்துவிட்டது அல்லது அத்திறனை பயன் படுத்துவதில்லை என்றே கூறலாம்.

பெரும்பாலான சமயங்களில் சமூகத்தில் ஒரு நபர் வன்முறையாளனாக உருப்பெறும் போது ஒட்டுமொத்த சமூகமும் அது ஒரு தனிப்பட்ட நபரின் பிரச்சினையாகவோ அல்லது குடும்பத்தின் பிரச்சினையாகவோ கருதி ஒதுங்கிக்கொள் கிறது. இதன்மூலமாக நாம் நம் சமூகப் பொறுப்பிலிருந்து நம்மை விடுவித்துக் கொள்வதுடன் ஒருவர் வன்முறையாளனாக உருவெடுப்பதில் நமக்கிருந்த பங்கையும் நிராகரிக்கின்றோம். இதுவே வன்முறை களை ஒழிப்பதில் உள்ள பெரும் நடைமுறைச் சவாலாகும். எவ்வாறிருப் பினும் உலகம் முழுவதும் மனித உரிமை செயற்பாட்டா ளர்களும், பெண்ணிலைவாதிகளும், பெண்கள் உரிமை செயற்பாட்டாளர்களும், சமூக ஆர்வலர்களும் வன்முறைகளுக்கெதிரான பிரசாரங்களையும் செயல்வாதங்களையும் முன்னெடுத்தபடியுள்ளனர்.

அதன்வழியில் கடந்த காலங்களில் சகலவிதமான வன்முறைகளுக்கும் தம் எதிர்ப்பை சுயகாட்சிப்படுத்தல்கள் மூலமாக வெளிப்படுத்திய 8 ஓவியர்கள் 2017இல் 'பெண்களுக்கு எதிரான வன்முறைகளற்ற வாழ்வை கொண்டாடுவோம்' என்கின்ற தொனிப்பொருளில் 3 நாள் ஓவியக் கண்காட்சியை முல்லைத்தீவில் ஒழுங்கு செய்திருந்தனர். இவர்கள் பெண்கள் தனிப்பட்ட நபர் மீதும், அவரது குடும்பம் மற்றும் சமூகத்திற்கும் ஏற்படும் பாதிப்புக்களை உணர்ந்தவர்கள்.

முல்லைத்தீவு கண்காட்சியைத் தொடர்ந்து, மட்டக்களப்பு கொக்கட்டிச்சோலையில் காட்சிப்படுத்தப்பட்டது. இதன்பின் வன்முறையற்ற வாழ்விற்கான ஓவியர்களின் 3 ஆவது கண்காட்சி 2017 செப்ரெம்பரில் மட்டக்களப்பு தாண்டவன்வெளியிலும் 4 ஆவது கண்காட்சி 'இயற்கையை வன்முறை செய்யாத வாழ்வை கொண்டாடுவோம்' எனும் தொனிப்பொருளில் மட்டக்களப்பு சத்துருக்கொண்டான் திருமலைவீதியில் திறந்தவெளிக் காண்பியக்கலைக் கண்காட்சியாகவும் காட்சிப்படுத்தப்பட்டது.

இதன்தொடர்ச்சியாக வன்முறையற்ற வாழ்விற்கான ஓவியர்களின் 5வது கண்காட்சி 2018 டிசம்பர் 9ம்10ம் திகதிகளில் கிளிநொச்சி கூட்டுறவு மண்டபத்தில் 'பெண்களுக்கெதிரான வன்முறைகளற்ற வாழ்தலைக் கொண்டாடுவோம்' எனும் தொனிப்பொருளில் காட்சிப்படுத்தப்பட்டது. இக் காண்பியக்கலைக் கண்காட்சியானது பால்நிலையை அடிப்படையாகக்கொண்ட வன்முறைகளை ஒழிப்பதற்கான 16 நாள் செயல்வாதத்தினை முன்னிட்டு ஏற்பாடு செய்யப்பட்டது.

ஒரு பெண் வன்முறைக்குள்ளாக்கப்படும் போது பல்வேறு காரணங்களால் அதை வெளிப்படுத்தாது தனக்குள்ளே அவ்வலியைப் புதைத்துக் கொள்கிறாள். இது வன்முறையாளர்களுக்கு மிகவும் சாதகமான சூழலை உருவாக்குகின்றது. ஆனாலும் கடந்த வருடம் முதல் சமீபகாலம் வரை 'மீ டூ' Me Too போன்ற சமூக இயக்கங்கள் சமூகவலைத்தளங்களில் பெண்கள் பரஸ்பரம் தங்கள் வாழ்வில் இடம்பெற்ற வன்முறைச் சம்பவங்களை வெளிப்படையாக பேசக்கூடிய வாய்ப்பை ஏற்படுத்தியிருந்தது.

ஆனாலும் கிராமங்களிலும் பல்வேறு தளங்களில் ஒடுக்கப்பட்டும் வாழும் பெண்களுக்கு, இத்தகைய சந்தர்ப்பங்கள் எட்டாக் கனியாகவே உள்ளன. இப்படி வாழ்கின்ற, குரல்கள் மழுங்கடிக்கப்பட்டு, தினமும் பார்வை, வார்த்தைகள் மூலமாக வன்முறை செய்யப்படுகின்ற துஷ்பிரயோகத்திற்கு உள்ளாக்கப்படுகின்ற அனைத்து பெண்களினதும் குரலாய் நாம் வெளிப்படுவோம். வன்முறைகளற்ற வாழ்வைக் கொண்டாடுவோம்...!

எதிர்பாருங்கள்

புதுவிதி PUTHU VITHI

எதிர்பாருங்கள்

100 ஆவது இதழ் நிறைவை முன்னிட்டு நடத்தப்பட்ட

சிறுகதை, கவிதை, கட்டுரைப் போட்டிகளின்

முடிவுகள்

22.12.2018 அன்று புதுவிதி இதழில் வெளிவருகிறது

ஒவ்வொரு பிரிவிலும் 1ஆம், 2ஆம், 3ஆம் பிரிவு பெறுவோர் விவரங்கள் வெளிவருகின்றன

## கதைமாந்தர்களின் ....

(21ஆம் பக்கம் பார்க்க)

அப்போது ரமணனோடு படித்த, பழகிய உறவாடிய காலங்கள் எல்லாவற்றையும் அவன் மீட்டுப் பார்க்கிறான். அந்தத் தாயாரோடு பல விடயங்களைப் பரிமாறிக் கொள்கிறான்.

"ஆம்பிளை செக்பொயிண்டி லிருந்து என்ரை பிள்ளை வெளியில வந்தவன் தம்பி. நான் கண்டனான் அதுக்குள்ளை என்னை பொம்பிளை செக் பொயின்ரிலை கூப்பிட்டாங்கள். நான் உள்ளை போயிட்டன். திரும்பி வந்து பார்த்தா என்ரை பிள்ளையைக் காணேல்ல. வெளியில நிண்டவன் தாங்கள் பிடிக்கேல்லை எண்டான். பஸ் வந்து தங்களை வவுனியாவிற்கு ஏற்றிச் செல்லுமெனக் காத்திருந்த சனத்துக்குள்ள நான் 'விசரி' மாதிரிச் திரிஞ்சன். என்ரை பிள்ளையைக் கண்டீங்களோ? என்று கேட்டு ஒருநாளோ இரண்டு நாளோ? பசி தாகம் ஒண்டுமே தெரியேல்ல"

மகனைப் பிரிந்த தாயின் வேதனைகளும் வார்த்தைகளும் தயாளனையும் வாட்டுகிறது. நாளை புறப்படும்போது ரமணனின் நினைவாக ஏதாவது ஒரு பொருளை எடுத்துச் செல்லலாம் என எண்ணுகிறான். தற்செயலாக அவனின் செருப்பு கண்களுக்குப் புலப்படுகிறது. அதனை எடுத்துச்செல்ல மனம் விரும்புகிறது. "முன் கதவைச் சாத்தப்போன வேளை கதவிற்குப் பின்னால் அந்தச் செருப்புகளை அவன் கண்டான். அவை ரமணனின் செருப்புகள். அவற்றை கிளிநொச்சியில் ரமணன் வாங்கியபொழுது அவனும்கூட இருந்தான். அவை ரமணனுக்குப் பிடித்திருந்தன. நல்ல லெதரில் சிறிய வேலைப்பாடுகளோடு கூடிய செருப்புகள். அவற்றை அதிகம் ரமணன் அணிவதில்லை. வெளியூர்களுக்கு, பாடசாலைக்குப் போகும் வேளையில் அணிவான். மற்றும்படி கறுத்த றப்பர் பாட்டா செருப்புத்தான் போட்டிருப்பான். தயாளன் அந்தச் செருப்புகளைப் பார்த்தவாறு நிற்பதைக் கண்ட ரமணனின் தாய் அருகில் வந்தாள். "இது ரமணனின் செருப்பு தம்பி. இதைத்தான் ரமணன் எண்டு வைச்சுக் கொண்டிருக்கிறம். ஒரே ஆறுதல் இதுதான். இதை பக்கத்தில வைச்சுப் போட்டுப் படுத்தாத்தான் வயித்துக்கொதி அடங்கி நித்திரை வரும்" என்றாள். அரிக்கேன் லாம்புத் திரியைக் குறைத்து வைத்துவிட்டு பாயை அவள் சுவரோரம் இழுத்துப் போடுவது தெரிந்தது. பின்போய் அந்தச் செருப்புகளை கையிலெடுத்துக் கொண்டு திரும்பி வந்தாள்.

இடுப்புச் சேலையைத் தளர்த்தி கொய்யகச் சுருக்குகளை வெளியே எடுத்து அவற்றில் செருப்புகளைப் பொதித்துச் சுருட்டி உள் பாவாடைக்குள் செருகி வயிற்றுக்கு நேரே இறக்கினாள் அவற்றை அணைத்துப் பிடித்தபடி படுத்துக் கொண்டாள். தயாளன் கண்களை நன்கு மூடிக் கொண்டான். மூடிய இமையோரத்தில் கண்ணீர் தேங்கியது."

இவ்வாறாக, குந்தவையின் 'பாதுகை' சிறுகதை மகனை இழந்துபோன ஒரு தாயின் மன வேதனைகளையும் ஏக்கங்களையும் உணர்வுபூர்வமாகப் பதிவுசெய்கி றது. இதனாற்தான் வெங்கட் சாமிநாதன் 'தொடரும் உரையாடல்' என்ற கட்டுரையில் "குந்தவையின் அடங்கிய குரலும் அமைதியும் நிதானமும் விசேஷ மானவை. அவரது எழுத்தும் அலங்காரங்களோ உரத்த குரலோ ஆவேச உணர்வோ அற்றது. ஆனால் மிகுந்த தேர்ச்சி பெற்ற எழுத்து." எனக் குறிப்பிடுகிறார்.

இச்சிறுகதையை அடிப்படையாகக் கொண்டு நண்பர் மதிசுதா 'பாதுகை' என்ற குறும்படத்தை எடுத்துள்ளார். அக்குறும்படத்தில் குறித்த உணர்பூர்வமான இக்காட்சி அழகாகப் பதிவு செய்யப்பட்டுள்ளது. இச்சிறுகதை சிங்களத்திலும் மொழிபெயர்ப்புக்குத் தேர்வாகியுள்ளது என்பதும் மேலதிக தகவல்கள்.

## நாஞ்சில்...

(21ஆம் பக்கத் தொடர்ச்சி)

இதில் பெரும்பாலான கதைகள் கட்டுரை வடிவிலேயே அமைந்துள்ளது விசேடமான யுக்தி. இவற்றைப் படிக்கும்போது இது கதையா? கட்டுரையா? என்ற ஐயம் எழுவதைத் தவிர்க்க முடியவில்லை. ஆதைக் கதாசிரியரே ஒப்புக்கொள்ளும் விதமாக முன்னுரையிலேயே தெளிவுபடுத்தி விடுகிறார்.

'கட்டுரைகளும் கதைபோல வாசிக்கப் பெற வேண்டும் எனும் கொள்கை உடையவன் நான். மேலும் கதைக்கும் கட்டுரைக்குமான ஆளுயரத் தடுப்புச் சுவர் இற்றும் இடிபட்டும் சிதிலமாகியும் வருகிறது தற்சமயம். எனினும் வாசிப்பு அனுபவத்துக்கு அது ஊறாக இருக்கிறது ஏனில் பிழை பொறுக்க'.

ஒவ்வொரு கதையிலும் கதாபாத்திரங்கள்தான் கதையை வழிநடத்துகின்றன என்றாலும் கதாசிரியரும் கதையின் ஊடே தன்மை, முன்னிலை முறையில் கதையில் தோன்றி கதைச்சூழலுக்கேற்ற விளக்கங்களை அளிப்பது வித்தியாசமான கதைசொல்லல் பாணியாக உள்ளது. சாஹித்ய அக்கடமி விருது பெற்ற இந்தத்தொகுப்பு அதற்கான தகுதியை உடையதுதான் என்பதைக் கதைகளை வாசிக்கும்போது உணர முடிகிறது.

## உரிமையை...

(06ஆம் பக்கத் தொடர்ச்சி)

ரணில் விக்கிரமசிங்கவுடன் மேற்கொண்ட சந்திப்பின் போதும் சிறீதரன் கலந்து கொள்ளவும் மறுத்துவிட்டார் எனவும் தெரிய வருகின்றது.


இந்தச் சந்திப்பின்போது பெப்ரவரி 4 ஆம் திகதிக்கு முன்பாக புதிய அரசியலமைப்பை நிறைவேற்றுவதாக ரணில் விக்கிரமசிங்க வாக்குறுதி அளித்தார் என்றும் அரசியல் கைதிகள் விவகாரம், காணாமல் ஆக்கப்பட்டோர் பிரச்சினைகள், காணி விடுவிப்பு என்பன தொடர்பாக சாதகமான முறையில் பேசப்பட்டதாகவும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் தெரிவித்துள்ளார்.

புதிய அரசியலமைப்பு நிறைவேற்றப்படுவதானால் மூன்றில் இரண்டு பெரும்பான்மை வேண்டும். 122 உறுப்பினர்களை மட்டும் வைத்துக் கொண்டு எப்படி புதிய அரசியலமைப்பை நிறைவேற்ற முடியும் என்ற கேள்வி எழுகிறது. எனினும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அந்த வாக்குறுதிகளை ஏற்றுக் கொண்டு ரணில் விக்கிரமசிங்கவுக்கு பூரண ஆதரவை வழங்க முடிவு செய்துள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமை இப்படிக் கூறியபோதிலும் ஐக்கிய தேசிய முன்னணி தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் தங்களுக்கும் இடையே எவ்வித உடன்பாடோ, ஒப்பந்தமோ கிடையாது என்று திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளது.

தென்னிலங்கை அரசியல் சக்திகள் நெருக்கடிகள் ஏற்படும்போது தமிழ் அரசியல்வாதிகள் உதவிகளை நாடிப் பெறுவதும், வாக்குறுதிகளை வழங்குவதும் பின்பு அவற்றை முற்றாகக் கைவிடுவதும் மீண்டும் மீண்டும் இடம்பெறும் சம்பவங்கள். அதைவிட தமிழ்த் தலைமைகளுக்கும் ஐக்கிய தேசியக் கட்சிக்கும் இடையே ஒரு அந்நியோன்யமான உறவு நிலவுவதும் உண்மை. ஆனால் அந்த உறவு என்றுமே தமிழ் மக்களின் உரிமைகளைப் பெறப் பயன்படுத்தப்படுவதில்லை. மாறாக தமிழ் மக்களுக்கு விரோதமான நடவடிக்கைகளுக்கே பயன்படுத்தப்பட்டன. அதே நிகழ்ச்சி நிரல் தற்சமயமும் மேடையேற்றப்படுகின்றது என்பதில் சந்தேகமில்லை.

# ஆரிட்டை சொல்லி அழ?



## இது நாட்டு நடப்பைப் பற்றிய ஒரு (வி)சித்திரத் தொடர்

## எப்படியும் ஏமாத்துவாங்களாம்

அரசியல் அமளீக்கை இது வேறை. மஹிந்த ஒருக்கா உதை நம்பிப் போய் வாங்கின அடி தெரியாதோ? பேந்தும் பேந்தும் போய் ....... இந்தியாவிலை உள்ள மந்திரவாதியளை நம்பிக் கெட்டது போதாதோ? மினைக்கெட்டு அவனைக் கொண்டு வந்து பைவ்ஸ்ரார் ஹோட்டலிலை அறையைப் போட்டு அவனைக் குடிக்கப் பண்ணி நல்லாக் குளிக்கப் பண்ணின பிறகு அவன் சொல்லுற சாமான்களையும் வேண்டிக் குடுத்து யாகம் வளத்து... எண்டு எல்லா விளையாட்டையும் செய்து கடைசியா ஒண்டும் இல்லை. தோத்ததுதான் மிச்சம். வீண் காசு. மந்திர தந்திரத்தை நம்பி இராஜதந்திரத்தைக் கைவிட்ட கேஸ்தான் உது.

அலரிமாளிகைக் குள்ளை யாகம் வளர்க்கினமாம். ஒரே மந்திரம் சொல்லுற சத்தமாம். உது உண்மையா யாகம் வளர்க்கிற சத்தமோ? இல்லாட்டி ரணில் மைத்திரியை வெருட்ட சீட ஒண்டை வாங்கிப் போட்டிருக்கிறாரோ தெரியாது எண்டு ஒரு தலை சொல்லுது. அந்த மந்திரத்துக்கை அடிக்கடி "மைத்ரீ மைத்ரீ" எண்டு உச்சாடனம் செய்யினமாம். அவை மந்திரத்திலை உள்ள வேறை திரியைச் சொல்லேக்கை அவை தொடர்பான ஆக்களுக்கு அது மைத்ரீ எண்டு கேக்கிதோ தெரியாது. ஆனால் மைத்திரியின்ரை ஆக்கள் சொல்லினம் அவைக்குச் செவ்வயா அது மைத்ரீ மைத்ரீ எண்டுதான் கேட்டதெண்டு.

ரணில் ஒரு நாளும் மஹிந்தா மாதிரிக் காசைச் செலவழிச்சு உப்பிடி மோட்டு வேலை செய்யமாட்டாராம்.ஏனெண்டால் அவர் ஒரு கொடாக் கண்டன். பச்சைத் தண்ணியிலை பலகாரம் சுடுகிறவராம் எண்டு கேள்வி. உதை அந்தத் தலை சொல்லித்தான் தெரியவேண்டிய விசியமோ? ஏன் நடந்ததெல்லாத்தை யும் மறந்து போனமெண்டு நினைச்சினமோ? தமிழ் ஆக்களுக்குச் செய்த கடப்புலித்தனம் எல்லாம் எங்கடை ஞாபகத்திலை இருக்கு. "தமிழருக்கு உச்சக் கட்டத் தேரோகத்தைச் செய்தது ரணில்" எண்டு நேற்றைக்கு ஒரு சிங்களப் பேப்பரிலை போட்டிருக்காம். உதை ஆர் சொல்லி அவையள் போட்டிருக்கினமெண்டு தெரியாது

அதை வடிவாத் தெரிஞ்சிருந்தும் சம்பந்தர் ரணிலோடை சம்பந்தம் செய்ய யோசிக்கிறார்.ஏன் எண்டு கேட்டால் சொல்லுறார் இல்லை. இப்ப இருக்கிற நிலைமையிலை ரணிலோடை கதைச்ச விசியத்தை வெளியிலை சொன்னால் எல்லாம் கிழிஞ்ச கதையாப் போயிடுமாம். அதாலை புத்திசாலித்தனத்தோடை நடக்க வேணும் எண்டு சுமந்திரனும்" சொல்லுறாராம். இப்ப எங்கடை உரிமைப் பிரச்சினையை இரண்டாம் பேருக்கும் தெரியாமல் காதோடை காதோடை காது வைச்ச மாதிரிதத்தான் செய்ய வேணும் எண்டு அவை சொல்லினம்.

இவ்வளவு காலம் அனுபவப்பட்டிட்டம் இனியும் உது நடக்குமோ எண்டு சனம் கேக்கிது. சனம் கேக்கிறதிலையும் ஞாயங்கிடக்கெல்லே? அவைக்கு எப்பவும் கூட்டமைப்பின்ரை கதையிலை ஒரு ஐயுறவுதான். எப்பிடியும் ஏமாத்துவங்கள் எண்டு சொல்லினம். தந்தை செல்வா தொட்டுச் சனத்தை ஏமாத்தினவைதானே! அமிர்தலிங்கம் முழுப்பூசனிக்காயைச் சோத்துக்கை புதைச்சவர். வெளிப்படையாத் தமிழ் சமூகத்தையே ஒட்டுமொத்தமா காவுகொண்டவர்.

வடக்கையும் கிழக்கையும் சிங்களவன் பிரிக்கேல்லை. முதல் முதல் பொம்பிளைப் பிரச்சினையை காரணம் காட்டி வடக்கையும் கிழக்கையும் மாசீகமாப் பிரிச்சது தமிழ் அரசுக் கட்சி. அதுக்கு சுதந்திரன் பத்திரிகையிலை எழுதி எழுதித் தூபம் போட்ட பெருமை கோவை மகேசனுக்குத்தான் சேரும். பிறகு இப்ப ஜேவிபி கேஸ்போட்டுச் சட்ட ரீதியாப் பிரிச்சு விட்டிருக்கெல்லோ! இராஜதுரைக்கு கல்லு வைக்கப் போய்த்தான் தமிழரசுக் கட்சிக்குள்ளை ஆப்பு வைபட்டது. முதல் அமிர்தலிங்கத்தை ஆரேன் கேட்டவையே குடும்பத்தோடை வந்து தமிழ் சனத்தை மீட்டுவிடு எண்டு? பெண்டில், பிள்ளையளோடை வந்து தண்ணிப் பந்தல் நடத்தினமாதிரிக் கட்சி அரசியலை நடத்தி அப்பப்ப சனத்தையும் ஏமாத்தினதுதான் மிச்சம்.

அதுக்குப் பிறகு அந்த வழி வந்து அந்தப் பாடத்தைப் படிச்சுப் படிச்சு சனத்தை வடிவா ஏமாத்திறது எப்பிடி எண்டு தெரிஞ்சு வைச்சிருக்கினம். மாவையும் அதே பிடி. பாக்கப் போனால் கஜேந்திரகுமாரும் உதே பிடி.முன்னாள் முதலமைச்சரும் உதே பிடி. அப்ப சனம் மிதந்து மேலை வாறதெப்பிடி எண்டு கேக்கிறம்?

ஏமாத்தி ஏமாத்தி அரசியலைச் செய்யினம் எண்டு சொல்லிக் களைச்சுப் போனம் எண்டதை அருக்குச் சொல்லி அழ?

**- கோளரங்கன்.**

# பசியில் தவிக்கும்...

(08ஆம் பக்கத் தொடர்ச்சி)

ராணுவவாதம்தான் உலகில் அகதிகளை உருவாக்குவது, இனவெறி மற்றும் வெறுப்புஉணர்வை வளர்த்தெடுப்பது மற்றும் இன்று நாம் அணு ஆயுதப் பேரழிவை எதிர்நோக்கி இருப்பது போன்றவற்றிற்கு அடிப்படைக் காரணியாக இருக்கிறது.

நமது சமூக வாழ்வின் அனைத்து அங்கத்திலும் இதன் தாக்கத்தை உணர முடியும். ராணுவத்திற்காகச் செலவிடுவதை குறைக்க வேண்டும் என அமெரிக்க மக்களும் விரும்புகின்றனர். சமீபத்தில் வந்த கருத்துக்கணிப்புகள் சில உலக நாடுகளில் உள்ள பெரும்பான்மையானவர்கள், அமெரிக்காவை உலக அமைதிக்கு அச்சுறுத்தலாகக் கருதுவதாக தெரிவித்துள்ளது' உலகம் முழுவதும் ராணுவத்துக்காக அமெரிக்கா செலவு செய்ததில் சிறு துளியை மருத்துவம், கல்வி, சுகாதாரம் உள்ளிட்ட அத்தியாவசியத் தேவைகளுக்காக (ராணுவச் செலவுகளில் சிறு அளவே இதற்குப் போதுமானதாக இருந்திருக்கும்) செய்திருந்தால்கூட இத்தகைய வெறுப்பைச் சம்பாதித்திருக்க வேண்டிய தேவை இருந்திருக்காது"

அமெரிக்க அரசியலமைப்பின்படி, எந்தவொரு நாட்டின் மீதும் போர் தொடுக்க வேண்டும் அல்லது ஊடுருவல் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றால் அதற்கு நாடாளுமன்றத்தின் ஒப்புதல் அவசியம். ஏமன் போரில் ஈடுபடுவதற்கு அமெரிக்க நாடாளுமன்றம் ஒப்புதல் அளிக்கவில்லை. இந்தத் தீர்மானம் உடனடியாக அமெரிக்க அரசின் தலையீட்டை நிறுத்தாது என்றபோதிலும் ஒரு சிறிய அளவிலான சலனத்தை ஏற்படுத்தும் என்று நம்பப்படுகிறது.

வியட்நாம் யுத்தத்துக்கு அமெரிக்காவில் மிகப்பெரிய அளவில் எதிர்ப்பு உருவானதும், முகமது அலி உள்ளிட்டோர் வெளிப்படையாகவே ராணுவ சேவையில் ஈடுபட முடியாது என அறிவித்ததும் அமெரிக்க சிவில் சமூகத்தில் மிகப்பெரிய எழுச்சியை ஏற்படுத்தியது. அமெரிக்கா, வியட்நாமிலிருந்து பின்வாங்கியதில் அது பிரதான காரணமாக இல்லையென்றாலும் அத்தகைய ஒரு எழுச்சி மிக முக்கியப் பங்காற்றியது. அமெரிக்காவில் அகதிகளின் குழந்தைகளை அவர்களின் பெற்றோர்களிடமிருந்து பிரித்து தடுப்புச் சிறைச்சாலைகளில் அடைக்கச் சமீபத்தில் ட்ரம்ப் அரசு உத்தரவிட்டிருந்தது. இது அமெரிக்கர்களிடையே மிகப்பெரிய கொந்தளிப்பை ஏற்படுத்தியது. சிவில் சமூகத்தின் அழுத்தம் காரணமாக, டிரம்ப் அரசு அந்த உத்தரவைத் திரும்பப்பெற்றது. அத்தகைய விளைவை இந்தத் தீர்மானம் ஏற்படுத்துமா என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

முன்னாள் ஐ.நா. பொதுச் செயலாளர் கோபி அன்னான், 2004 ஆம் ஆண்டு இராக்கில் அமெரிக்கா ஊடுருவியதைக் கண்டித்துப் பேசியபோது, 'ஈராக் மீதான அமெரிக்காவின் போர் சட்டவிரோதமானது" எனக் குறிப்பிட்டிருந்தார். ஈரானின் ஆதிக்கத்தைத் தடுப்பதற்காகவே அமெரிக்கா மத்திய கிழக்கில் அமைதியற்ற சூழலை நிலைத்திருக்கச் செய்து கொண்டிருப்பதாக ஒரு குற்றச்சாட்டு பரவலாக வைக்கப்படுகிறது. எந்தவொரு ஏகாதிபத்திய நாடுகளுமே மோதிக்கொள்ளத் தேர்ந்தெடுப்பது மூன்றாம் உலக நாடுகளைத்தான். அதைத்தான் நாம் சிரியாவிலும் பார்க்க முடிகிறது. அதிகாரப் பரவலாக்கம், பிராந்திய ஆதிக்கம் என்பதைத் தாண்டியும் இதில் அந்த நாடுகளின் வர்த்தக நலன்களும் லாபங்களுமே பிரதானமாக இருப்பது தவிர்க்க முடியாத உண்மை.

■ நா.யோகேந்திரநாதன்

# நீந்திக் கடந்த நெருப்பாறு

54

நன்றி தமிழ்லீடர் - அவுஸ்ரேலியா

புத்துவெட்டுவான் செல்வராஜா ஐயாவின் மகள் உட்பட பதினொரு வாழவேண்டிய இளம் பிள்ளைகளை கிளைமோரிலை பலியெடுத்தது இவர்களாகத்தான் இருக்க வேண்டும் என அவன் நம்பினான். ஆனால் கோபத்தை அடக்க முடியவில்லை.

சுந்தரம் சுற்றும் முற்றும் பார்த்தான். ஒரு பட்ட மரக் கட்டை அவனின் கண்களில் பட்டது. அதை எடுத்துவந்து செத்துக் கிடந்த படையினன் ஒருவனின் தலையில் ஓங்கி ஒரு போடு போட்டான். அவனின் மண்டை பிளந்து இரத்தம் கொட்டியது.

திடீரென கோபமடைந்த போராளி கேட்டான், "அண்ணை! நீங்கள் என்ன வேலை செய்யிறியள்?

"தம்பி இவங்கள் லேசுப்பட்ட ஆக்களே? பதினொரு பள்ளிக் கூடப் பிள்ளைகளைக் கிளை மோரிலை கொன்டவங்கள். நாளைக்கு டாக்குத்தராய் இஞ்சினியராய், வாத்தியாராய் ஏன் போராளியள் தளபதிகளாய்க் கூட வரக்கூடிய பிள்ளையள் இவங்களை.", என்றுவிட்டு மீண்டும் தடியை ஓங்கினான் சுந்தரம்.


தடியை எட்டிப்பிடித்த போராளி, "பொறுங்கோ உங்கடை கோபம் நியாயமானது. ஆனால் நாங்கள் விடுதலைப் போராளியள், எதிரியெண்டாலும் செத்துப் போனால் இராணுவ மரியாதை யோடை அடக்கம் செய்யிறது தான் எங்கடை பண்பு.

நாங்கள் அவங்களைப் போலை நடக்க ஏலாது! நீங்கள் செய்தது மாதிரி ஒரு போராளி செய்திருந்தால் கடுமையான தண்டனை கிடைச்சிருக்கும். நீங்கள் ஒரு பொதுமகன் எண்டபடியால் விடுறம்", என்றான்.

அந்தப் போராளி சொல்வதில் நியாயம் இருப்பதுபோல் தோன்றினாலும் அவனின் கோபம் அடங்கவில்லை. தடியை எறிந்துவிட்டுப் போய் சாரதி ஆசனத்தில் ஏறினான். அப்போதுதான் முருகையா வலது பக்க முன் சில்லை கவனித்தான். அவன், "மச்சான் முன் சில்லு ஒண்டு காத்துப் போட்டுது", என்றான்.

இறங்கி வந்து முன் சில்லை நசித்துப் பார்த்த சுந்தரம், "ஓம டாப்பா இப்ப என்ன செய்ய?" எனச் சற்று யோசித்துவிட்டு, "சரி ஒரு மரக்கட்டையை தூக்கி வா", என்றான்.

மூவரும் காற்றுப் போன பக்கத்தைத் தூக்க சுந்தரம் சுந்தரம் கீழ்ப்பக்கத்தில் மரக்கட்டையைச் சொருகினான். இப்போ உழவியந்திரம் ஒற்றை முன் சில்லில் நின்றது. மற்றவர்கள் அனைவரையும் பெட்டியில் ஏற்றிவிட்டு சுந்தரம் உழவியந்திரத்தை ஓட ஆரம்பித்தான். அவர்கள் களமுனைக்கு வந்த போது சண்டை முற்றாக ஓய்ந்திருந்தது. குறிப்பிட்ட இடத்தில் சாப்பாட்டுப் பெட்டிகளை இறக்கி அங்கு நின்ற பெண் போராளிகளிடம் பாரம் கொடுத்துவிட்டு அவர்கள் புறப்பட்டனர்.



ஏற்கனவே திட்டமிட்டபடி திரும்பிப் போகும் போது படையினரின் சடலங்களையும் ஏற்றிக்கொண்டு போய் அரசியல் துறையினரிடம் ஒப்படைத்தனர். சுந்தரத்துக்கு அந்தச் சடலங்களைப் பார்த்தபோது செல்வராஜா ஐயாவின் பரிதாப கோலம் நினைவுக்கு வந்து மீண்டும் மீண்டும் கோபத்தை மூட்டியது. திரும்பி வந்து சேர்ந்தபோது சுந்தரத்துக்கும் நன்றாக பசிக்க ஆரம்பித்துவிட்டது. நால்வரும் எஞ்சியிருந்த சாப்பாட்டில் சிறிதளவு எடுத்துச் சாப்பிட்டார்கள். நன்றாகப் பசித்தபோதும் சுந்தரத்தால் முழுமையாகச் சாப்பிட முடியவில்லை.

இதைச் சாப்பிட்டா போராளிகள் கள மாடுகின்றனர் என்ற கேள்வி அவனுள் எழவே செய்தது. எல்லா விதங்களிலும் அர்ப்பணிப்புக்களை மேற்கொண்டு களமாடிய போராளிகளை நினைத்தபோது தன்னைப் போன்றவர்கள் பயனற்ற மனிதர்கள் போலவே அவனுக்குத் தோன்றியது. எப்படியிருந்தபோதிலும் அன்றுதான்இரு போராளிகளையும் களமுனைக்குக் கொண்டு சென்ற உணவையும் காப்பாற்றியதில் ஒருவித திருப்பதியடைந்தான் சுந்தரம்.

• • •

பூநகரி - மன்னார் வீதிக்கு மேற்குப் பக்கமாக நின்று போராடிய சிவத்தின் அணியினருக்கு மதியம் இரண்டு மணிக்குப் பிறகே சாப்பாடு வந்து சேர்ந்தது. விளாத்தியும் விடத்தலும் நாகதாளியும் நிறைந்த வறண்டபற்றைக்காடு வழியாகத் தோள்ச் சுமையிலேயே சாப்பாடு கொண்டுவர வேண்டியிருந்தது. காலை உணவும் எடுக்காமல் வந்த போராளிகள் தங்கள் பொக்கெற்றுக்களில் இருந்த பிஸ்கெட்களைச் சாப்பிட்டுக்கொண்டே போராட வேண்டியிருந்தது. அந்த அணியில் புதிய போராளிகள் மிகக் குறைவாகவே இருந்தனர். கூடுதலான போராளிகள் பல களங்களில் அனுபவம் பெற்றவர்களாதலால் பசியுடனும் சளைக்காது போராடிக் கொண்டிருந்தனர்.

பள்ளமடு, விடத்தல்தீவு வீதியில் படையினரை ஏற விடக்கூடாது என்பதில் சிவம் மிக உறுதியாக இருந்தான். அவர்கள் அந்த இடத்தைப் பிடித்துவிட்டால் விடத்தல்தீவில் நின்று போராடும் போராளிகளைப் பின்பக்கமாக வளைக்கக் கூடிய வாய்ப்பு ஏற்பட்டுவிடும். எனவே சிவத்தின் அணி உக்கிரமாகவே போராடிக் கொண்டிருந்தது. எப்படியிருந்த போதிலும் நெருக்கடியான சண்டைகளில் படையினரால் போராளிகளுடன் நின்று பிடிக்க முடியாது என்பதில் சிவம் பலமுறை அனுபவத்தில் கண்டிருந்தான்.

நேரம் ஒரு மணியை நெருங்கிய போது திடீரெனப் படையினரின் எறிகணை வீச்சு இடம்பெறக்கூடும் எனச் சிவம் எதிர்பார்த்தான். அந்த நேரத்தில் தாங்கள் முன்னேறி படையினருடன் நெருக்கமாக நின்று மோதுவது கூடுதலான பாதுகாப்பு என அவன் கருதினான். உடனடியாக கட்டளைப் பீடத்துடன் தொடர்பு கொண்டான். ஆட்காட்டிவெளி, பாப்பாமோட்டைப் பகுதிகள் பலவீனமாக இருப்பதால் அந்தப் பக்கம் உடைக்கப்பட்டால் சுற்றிவளைக்கப்படும் அபாயம் இருப்பதால் முன்னேற வேண்டாம் எனக் கட்டளை வந்தது. மேலும் எறிகணைகள் விழக்கூடிய பகுதியை விட்டுப் பின்வாங்கும்படியும் ஆலோசனை கூறப்பட்டது.

வேறு வழியின்றி சிவம் தனது அணியை, வீதியை விட்டு கிட்டத்தட்ட இருநூறு மீற்றர் பின் நகரத்தினான். உடனடியாகவே பத்துப் பத்துப் பேராக போராளிகளைச் சாப்பிட அனுமதித்திருந்தான். மாலை மூன்று மணியளவில் அதுவரை நிலவிய அமைதி குலைந்தது. அவன் எதிர்பார்த்ததற்கு மாறாக வானில் தோன்றிய மிகையொலி விமானங்கள் விடத்தல்தீவு மீது மாறி மாறி குண்டுமழை பொழிய ஆரம்பித்தன. சிவம் எதையும் முகம் கொடுக்கும் விதமாகத் தனது அணியைத் தயார்ப்படுத்திக் கொண்டான்.

• • •

சுந்தரம் மருத்துவமனைச் சந்தியில் வந்து ஏறியபோது அது ஓரளவு வெறிச்சோடிப் போய்விட்டது. நோயாளர்களோ, காயமடைந்தவர்களோ எவருமே அங்கு காணப்படவில்லை. மருத்துவமனைப் பணியாளர்களும் சில இளைஞர்களும் மருத்துவமனையின் தளபாடங்களை வாகனங்களில் ஏற்றிக்கொண்டிருந்தனர். அவன் சைக்கிளை தான் ஏற்கனவே விட்ட இடத்திலிருந்து எடுத்துக்கொண்டு வீதியில் ஏறியபோது விடத்தல்தீவுப் பக்கமாக விமானங்கள் குண்டுகளைப் பொழிய ஆரம்பித்தன.

மக்கள் செறிவாக வாழும் விடத்தல்தீவின் மீதே இப்படிக் கண்மூடித்தனமாகத் தாக்குதல் நடத்தும் விமானப் படையினர் இலுப்பைக்கடவை மருத்துவமனையையும் விட்டு வைக்கப் போவதில்லை என்பதாலேயே அது வேறு இடத்துக்கு மாற்றப்படுவதாக அவன் கருதினான். ஏற்கனவே இடம்பெயர்ந்து பாடசாலையிலும் கோவிலிலும் தங்கியிருந்த மக்களில் ஒருவர்கூடக் காணப்படவில்லை. எல்லோரும் முழங்காவில் பக்கமாகப் போய்விட்டனர்.

(நெருப்பாற்றில் நீந்துவோம்)

# கதை மாந்தர்களின் கதை - 04



## குந்தவையின் 'பாதுகை'

சு. குணேஸ்வரன்



1963 இல் ஆனந்தவிகடனில் 'சிறுமை கண்டு பொங்குவாய்' என்ற முத்திரைக் கதையுடன் அறிமுகமானவர் எழுத்தாளர் குந்தவை. இவரது இயற்பெயர் சடாட்சரதேவி. யுத்தத்தின் கோரமுகங்களைத் தரிசித்து தொண்டைமானாற்றை விட்டு அகலாது தளர்ந்த வயதிலும் தனியாக வாழ்ந்து வருபவர். ஈழத்தில் பெயர் குறிப்பிடக்கூடிய மூத்த பெண் எழுத்தாளர்களில் ஒருவர். இன்றுவரையும் எழுதி வருபவர். இவரின் "யோகம் இருக்கிறது", "ஆறாத காயங்கள்" ஆகிய இரண்டு சிறுகதைத் தொகுப்புகள் இதுவரை வெளிவந்துள்ளன.



'பாதுகை' குறும்படத்தின் காட்சி

குந்தவையின் சிறுகதைகள் யதார்த்த வாழ்வின் பதிவுகள். ஈழத்து மாந்தர்களின் வாழ்வின் இருண்ட பக்கங்களையும் தன்னைப் பாதித்த கதைகளையும் மண்ணின் பண்பாட்டோடு அழகாக வெளிப்படுத்துபவை. இவரின் கதைகளில் வரும் காட்சிச் சித்திரிப்புக்கள் வாசகரை கதைகளோடு கட்டிப்போடக்கூடியவை. இவர் எழுதிய "பாதுகை" சிறுகதை பற்றி இச்சிறுகட்டுரையில் குறிப்பிடலாம்.

இறுதி யுத்தத்தின் பின்னர் காணாமலாக்கப்பட்ட பல பிள்ளைகளின் கதைகளில் ஒரு கதையை இது சொல்கிறது. அவளின் ஒரேயொரு மகன் அவளின் கண்முன்னேயே காணாமல் ஆக்கப்பட்டவன். மகன் வருவான் என எதிர்பார்த்து, தாய் எதிர்கொள்ளும் வேதனைகளும் உள்ளக்குமுறல்களும் உணர்வுபூர்வமாக கதையில் பதிவாகியுள்ளது.

"வாசலில் நின்று அம்மா அம்மா என்று கூப்பிட்டான் தயாளன். உள்ளே ஒருவருமிருப்பதாகத் தெரியவில்லை. முன் எப்பொழுதாவது இந்த வீட்டின் முன்நின்று இப்பிடி அந்நியன்போல் கூப்பிட்டிருப்பானா என யோசித்தான். "ரமணா" என கூப்பிட்டுக் கொண்டு அட்டகாசமாக உள்ளே நுழைந்துதான் பழக்கம். மீண்டும் கூப்பிட்டான். வெளியிலிருந்து வீட்டைச் சுற்றிக்கொண்டு யாரோ வருவது தெரிந்தது. ரமணனின் அம்மாதான். பாதியாய் இளைத்திருந்தாள். முன்கற்றைத் தலைமயிர் வெளுத்து காற்றில் அலைந்தது. கன்னம் ஒட்டிப்போய் இருந்தது. நடுவே சுருக்கங்கள்."

இவ்வாறு ரமணின் தாய் இச்சிறுகதையில் அறிமுகப்படுத்தப்படுகிறார். நீண்ட காலத்திற்குப் பின்னர் தனது நண்பன் ரமணனின் நிலை தெரிந்திருந்தும், அவனின் தாயாரிடம் ஒருமுறை வரும் சக நண்பனாகிய தயாளனின் பார்வையூடாகவே சிறுகதை நகர்கிறது. (18ஆம் பக்கம் பார்க்க)

# நாஞ்சில் நாடனின் 'சூடிய பூ சூடற்க'

சுரேஷ்




ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு குணமாக மாறும் சுயநல மனிதர்களைச் சாடும் அறத்தின் குரலாகவே இத்தொகுப்பிலுள்ள கதைகள் ஒலிக்கிறது. நாஞ்சில் நாடன் தனக்கேயுரிய சமூகக் கோபத்தை அது வெளிப்படுத்தும் ஆக்ரோஷத்தை எல்லாம் கட்டுப்பாட்டுடன் எழுத்துக்களாக மாற்றி எள்ளல் தொனியில் வடித்திருக்கிறார். தான் சிறிது காலம் எழுத்துக்கு ஓய்வு அளித்திருந்தபோது 'படைப்பாளிக்கு அனுபவமும் வாசிப்பும் பக்குவமும் உச்சத்திலிருக்கும் காலகட்டத்தை வெறிதே தொலைத்து விடவேண்டாம்' என தன் எழுத்தாள நண்பர் ஜெயமோகன் அக்கறையுடன் கூறியதைக் கேட்டு மனஎழுச்சி கொண்டு இக்கதைகளைப் படைத்திருப்பதாக முன்னுரையில் நாஞ்சில் நாடன் குறிப்பிடுகின்றார். பதினைந்து கதைகளை உள்ளடக்கிய இத்தொகுப்பில் ஒவ்வொரு கதையும் ஒவ்வொரு தளத்தில் இயங்குகிறது.

'கொங்குதேர் வாழ்க்கை' கதையில் எழுத்தாளரே கதை சொல்லியாக வருகிறார். பெட்டி பெட்டியாக கட்டப்பட்டிருக்கும் தொடர் வீடொன்றில் வாடகைக்கு குடியிருக்கும் அவர் அவ்வீடுகளின் அளவுகளையும் அதன் வசதிக் குறைவுகளையும் அவ்வீடுகளில் வாழ்ந்துவரும் மாந்தர்களின் இயல்பான வாழ்க்கையையும் நுட்பமாகச் சொல்கிறார். தெருவில் எதிர் வரிசையில் உள்ள வீடுகளில் ஒன்றில் குடியிருக்கும் வயதான தம்பதியினரின் பரிதாபமான வாழ்க்கையை நெகிழ்வுடன் விவரிக்கிறார்.

இத்தொகுப்பில் உள்ள கதைகளில் ஆகச்சிறந்த பாத்திரப் படைப்பாக இருப்பது கும்பமுனி கதாபாத்திரம்தான். கும்பமுனி - உதவியாளர் தவசிப்பிள்ளை உரையாடல்கள் எள்ளல் தன்மையுடன் அனைத்தையும் பகடி செய்கிறது. அதிலும் கும்பமுனி பாத்திரப்படைப்பு ஓர் எழுத்தாளரின் பாத்திரப்படைப்பாகப் படைக்கப்பட்டு கதாசிரியர் அதன் மூலம் தன்னை சுயபகடி செய்துகொள்கிறார். கும்பமுனி ஒரு கதையை எழுத முனையும்போது அதற்கான முஸ்தீபுகளில் ஏற்படும் இடர்களை நகைச்சுவையுடன் சொல்கிறது 'கதை எழுதுவதன் கதை'.

தேர்தல் நடைமுறைகளையும் அதன்பொருட்டு எழும் அநீதிகளையும் நக்கலடிக்கும் விதமாக கும்பமுனி தேர்தல் ஆணையத்துக்கு எழுதும் ஆலோசனைகளே 'தேர்தல் ஆணையத்துக்கு திறந்தவெளிக் கடிதம்' கதையாக உருவெடுத்துள்ளது. அதேபோல ஆங்காங்கே நடைபெறும் சுயம்வர நிகழ்வுகளைப் பகடி செய்து 'மணமானவருக்கு மட்டும்' கதை எழுதப்பட்டுள்ளது. (18ஆம் பக்கம் பார்க்க)




உங்கள் ஆக்கங்களை 'வாசிகை', ஆசிரியர், புதுவிதி, 107 : இராச வீதி, கோப்பாய், திருநெல்வேலி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கோ அல்லது sinnarajavimalan18@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கோ அனுப்பி வைக்கலாம்.

## மரகதக் கொடி



வெயில் வீசிக்கொண்டிருக்கின்ற
வனாந்தரத்தில்
உஷ்ணம் தாங்க இயலாமல்
இலைகளெல்லாம்
பறவைகளாகப்
பறக்கத் தொடங்கின

மழையை
ஒரு குடத்தில்
எடுத்துக்கொண்டு வந்து ஊற்றினேன்
நதியாக மாறி
ஓடிக்கொண்டிருந்த நீரில்
தாமரை இலைகள்
வெள்ளோட்டமாய்த் தத்தளித்தன

கன்னாமரக் காற்றை ரசித்தபடியும்
கிளிகளின் இசையில்
சிலிர்த்த படியும்
அந்த நீரோடையில்
என்னுடைய ஆசைகள்
மெதுமெதுவாக
மிதந்து செல்கின்றன

அழகான தேரைப்போல்
வந்து நின்ற
பூந்தோட்டத்தின் அருகில் அமர்ந்து
நீரோட்டத்தில் மிதந்து செல்லும்
என்னுடைய ஆசைகளின் அழகை
பார்த்துக் கொண்டிருந்தேன்


குறத்தியின் கழுத்தில் தொங்கும்
குண்டுமணிகள் போல
என்னுடைய ஆசை
களை பிடுங்கும் வேலைக்காரியின்
கைவளையல்கள் போல
என்னுடைய ஆசை
நாட்டியக்காரியின்
சலங்கையின் ஒலி போல
என்னுடைய ஆசை

தவிர
மற்றவர்களைப்போல்
பெரிசு பெரிசாக என்னால்
ஆசைப்பட முடியவில்லை
வாழ்க்கையை
மிக எளிமையாக
வாழ்ந்து
முடிக்க வேண்டும் என்றுதான்
என் மனம் விரும்புகிறது

- முகம்மது றியால்

# நேரமே நேர்த்திக்கு வழிவகுக்கும் இணுவில் பொது நூலகம்

பின்பற்றப்படவேண்டிய முன்னுதாரணம்




**நே**ரத்தின் முக்கியத்தை எங்கு உணரலாம்? ஒரு விபத்தில் சிக்கி மரணத்திற்காகப் போராடுவருக்குக் கொடுக்க வேண்டிய முதலுதவியில், அடுத்து விமானப் போக்குவரத்தில், அடுத்ததாகச் வீதி விபத்துகளில் எனப் பல வகையுண்டு.

“கொஞ்ச நேரத்துக்கு முன்பதாகக் கொண்டு வந்திருந்தால் காப்பாற்றி இருப்போம்” - என்று வைத்தியர் சொல்வதையும், “இரண்டு நிமிடங்கள் முன்பதாகச் சென்றிருந்தால் விமானத்தைப் பிடித்திருப்போம்” எனப் பயணிகள் சொல்வதையும், “ஒரு கணம் தாமதித்திருந்தால் அந்த விபத்திலிருந்து தவறி இருப்பேன்” - என்று விபத்தைச் சந்தித்தபின் சத்திர சிகிச்சைக்காகக் காத்திருப்பவரும் சொல்லக் கேட்டிருக்கிறோம்.

ஆனால் நேரத்தின் அருமை தெரியாது வாழ்வோடு விளையாடுகின்ற சோம்பேறிகளும் எம்மிடையே வாழ்ந்து கொண்டிருக்கின்றனர் என்பதைப் பல விழாக்களில் கண்டிருக்கிறோம். விழா தொடங்கிப் பல நிமிடங்கள், ஏன் பல மணித்தியாலங்கள் தாமதித்து வருகின்றவர்களும் உண்டு. அவர்களில் பெரும்பாலும் முதலிடம் வகிப்பவர்கள் அரச உத்தியோகத்தர்கள்தான். அடுத்ததாக அரசியல்வாதிகள்.

இப்படித் தாமதித்து வருபவர்களிடம் விழாக்காரரர்கள் ஒன்றுமே பேசுவதில்லை. வேண்டா வெறுப்போடு தன்னும் அவர்களை ஏற்றுக்கொள்வர். காரணம் விழாவில் குழப்பம் வந்துவிடக் கூடாது என்ற எண்ணத்திலும், அவர்கள் வைத்திருக்கும் அரச பதவிகளிலும் என்று ஏனோ அவர்கள் விளங்கிக் கொள்வதில்லை. நான் நினைக்கிறேன் “அவர்கள் விளங்கிக் கொண்டாலும் விளங்காதது போல நடிக்கிறார்கள் அல்லது அப்படி வருவதை அவர்கள் கௌரவம் என்று நினைக் கிறார்கள். ஆனால் கற்றறிந்த மாந்தர் மத்தியில் அது அகௌரவ மாகவே கணிப்பிடப்படுவதை அவர்கள் அறிவார்களா?

இந்த வருடம் ஆரம்பத்தில் எங்களூர் இந்துக் கல்லூரியில் ஒரு விழாவுக்காகச் சென்றிருந்தேன். பாடசாலைச் சமூகம் நேரத்திற்கு முன்னதாகச் சமுகமளித்திருந்தது. “ஏன் இன்னும் தொடங்கவில்லை” என அங்குள்ளவர்களிடம் கேட்டால் “பிரதம விருந்தினர் ஒரு வட மாகாண கல்வித் திணைக்கள அதிகாரி - அவர் வரத் தாமதமாகிறது. தொலைபேசியில் அழைத்தும் பதிலில்லை” எனச் சொன்னார்கள். அவர் வந்ததும் அவரிடம் தாமதமாக வந்ததுக்குக் காரணம் கேட்டேன். “தனது வாகனம் கோளாறாகிவிட்டது. அதே நேரம் ரெலிபோனைச் சார்ஜ் செய்ய மறந்துவிட்டேன்” என்றும் பதிலளித்தார். இப்படிப்பட்டவர்களே அதிகாரிகளாக இருக்குமிடத்தில் கடந்த ஞாயிறு இணுவில் பொது நூலகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சி முன்னுதாரணமாகக் கொள்ளக்கூடியது. அந்த நூலகத்தில் முன்பள்ளியும் இயங்கி வருகின்றது. அதை நிர்வகிப்பவர்களும் நூலக உறுப்பினர்களே. அந்த முன்பள்ளியின் கலைவிழா கடந்த ஞாயிற்றுக்கிழமை மாலை 3.30 க்கு ஆரம்பமாகும் என அறிவித்திருந்தனர். அறிவித்தபடி 3.30மணிக்கு விழா ஆரம்பமானது.



தலைவர் க.வசீகரனின் தலைமையில் விழா ஆரம்பமானது. பிரதம விருந்தினராக முறைசாரா உதவிக் கல்விப் பிரிவின் பணிப்பாளர் த.சிவகுமார் பிரதம விருந்தினராகவும். பொதுச் சுகாதாரப் பரிசோதகர் இரா. இந்திரஜித் சிறப்பு விருந்தினராகவும் கலந்து சிறப்பித்திருந்தனர். பாராட்ட வேண்டிய விடயம் என்னவெனில், அவர்கள் நிகழ்ச்சி தொடங்கும் நேரத்துக்கு முன்பாகவே வந்து நிகழ்வை நேரத்துக்குத் தொடங்க ஒத்துழைத்திருந்தனர். நேரத்துக்குத் தொடங்கிய விழா நேர்த்தியாக நடைபெற்றது.

சிறுவர்களுக்கான விழா எப்படி நடைபெற வேண்டுமோ? அப்படியே நடந்தது. சிறுவர்களுக்கான உலகம் பொதுவானது. அடிப்படையில் அவர்கள் எண்ணங்கள், எதிர்பார்ப்புகள், அபிலாஷைகள் எல்லாம் ஒன்றே. சூழ்நிலைக்கு ஏற்றவாறு அவர்கள் புறத் தோற்றம் மாறலாம். மானசீகமாக அவர்கள் தமது உறவுகளைச் சார்ந்து வாழ விரும்புபவர்கள். அதற்கமைய முன்பள்ளிச் சிறார்கள் எல்லோரும் நிகழ்வில் பங்குபற்றினர்.


அவர்களின் உறவுகள் வந்திருந்து வாழ்த்தியுமிருந்தனர். அனைத்துச் சிறுவர்களுக்கும் ஒரே மாதிரியான பரிசு வழங்கப்பட்டது. இவ்வருடம் முன்பள்ளிக் கல்வியை முடித்து வெளியேறும் சிறுவர்களுக்குப் பட்டமளிப்பைப் போன்றதொரு நிகழ்வும் நடைபெற்றது. சமூகத்தின் முளைகளாக இருக்கின்ற அவர்கள் நாற்றாகி - பயிராகி நலமான சமூக உறுப்பினர்களாக வருவதற்கு இது போன்ற நிகழ்வுகள் பயனளிக்கும். •






செல்வன்
க
கனவு
பவர்


மாகக்
ில் இந்தப்
னம்
ர்.
ாடரில்
தகவல்கள்
ல.





கதைகளை நம்பிப் படங்களில் நடிப்பவர் விஜய் சேதுபதி. இவர் நடித்த 'சீதக்காதி', 'பேட்ட' படங்கள் அடுத்தடுத்து வரவுள்ளன.

இந்நிலையில் சன் தொலைக்காட்சியில் நிகழ்ச்சி ஒன்றையும் அவர் தொகுத்து வழங்கவுள்ளார். என்ன நிகழ்ச்சி, எப்போது ஒளிபரப்பு என்பது விரைவில் வரும்.




ஹன்சிகாவின் 50 ஆவது படமான 'மஹா' படத்தின் முதல்பார்வை வெளியாகியுள்ளது.

முதல் பார்வையில், அவர் இந்து, இஸ்லாம் எனப் பல வேடங்களில் இருக்கிறார். முதல் பார்வையைப் பார்த்த பலரும் படக்குழுவை வாழ்த்தியுள்ளனர்.



ரஜினி, அக்ஷய்குமார் நடிப்பில் வெளியான படம் '2.0.' 1,300 கோடி (இலங்கை) ரூபாவை வசூலித்து விட்டது.

அக்ஷய்குமாரின் நடிப்பில் வெளியான படங்களில் அதிகம் வசூலித்தது இந்தப் படம்தானாம். ஒரு தமிழ்ப் படம் பொலிவுட் நடிகருக்கு சாதனைப் படமாக அமைந்துள்ளது புதிய விடயம்தான்.


அமலாபால் நடித்துவரும் 'ஆடை' படத்தின் படப்பிடிப்பு இறுதிக்கட்டத்தை நெருங்கியுள்ளது.


இம்மாதம் சென்னையில் தொடங்கும் படப்பிடிப்பு வரும் ஜனவரியில் நிறைவடைகிறது.



நயன்தாரா அஜித்துடன் 'விஸ்வாசம்', விஜயுடன் 'தளபதி 63', சிரஞ்சீவியுடன் 'ரைசா நரசிம்மரெட்டி', நிவின்பாலியுடன் 'லவ் அக்ஷன் ட்ராமா' படங்களிலும், நாயகிக்கு முக்கியத்துமளிக்கும் 'ஐரா', 'கொலையுதிர்காலம்' படங்களிலும் நடித்து வருகிறார்.

இந்நிலையில் சிரஞ்சீவியின் 152 ஆவது படத்திலும் நயன்தாராவே நடிக்கவுள்ளார்.





# ஓவியம்

அனைத்து விதமான கிரிக்கெட் போட்டிகளில் இருந்தும் ஓய்வு பெறும் முடிவை கௌதம் கம்பீர் கடந்த வாரம் அறிவித்திருந்தார். தற்போது நடைபெற்று வரும் ரஞ்சிக் கிண்ணத் தொடரில் டெல்லி அணிக்காக விளையாடி வரும் கம்பீர் தனது இறுதிப் போட்டியை ஆந்திர அணிக்கெதிராக கடந்த வாரம் விளையாடி சதமும் அடித்திருந்தார்.

டெல்லி பெரோஷா கோட்லா மைதானத்தில் நடைபெற்ற இந்தப் போட்டியில் அவருக்கு சக வீரர்களும் 500 இற்கும் மேற்பட்ட ரசிகர்களும் டெல்லி கிரிக்கெட் சங்கத்தினரும் உரிய கௌரவத்தை வழங்கி இருந்தனர். குறிப்பாக டெல்லி நுண்கலைத்துறை நிறுவனத்தில் ஓவிய ஆசிரியராகப் பணிபுரியும் பைஸ் அஹ்மட் என்ற ரசிகர் அந்தப் போட்டியில் கம்பீர் துடுப்பெடுத்தாடும் பொழுது மைதானத்தில் இருந்தே அந்தக் காட்சியை மைதானத்தின் பின்னணியில் வரைந்து அவரிடமே கொடுத்துள்ளார். ஓவியத்தைப் பெற்றுக்கொண்ட கம்பீர் அவரை மனதாரப் பாராட்டியும் உள்ளார்.





# அதிருப்தி

இந்த வாரம் நடைபெறவுள்ள அடுத்த வருட ஐ.பி.எல் தொடருக்கான வீரர்கள் ஏலம் அணி உரிமையாளர்களை அதிருப்திக்குள்ளாக்கி உள்ளது. வழமையாக ஐ.பி.எல் தொடரின் ஏலம் பெப்ரவரி மாதத்திலேயே நடைபெறுவதுண்டு. அப்பொழுது இந்தியாவில் நடைபெறும் உள்ளூர் தொடர்களான சையட் முஸ்ராக் அலி இருபதுக்கிருபது தொடர் மற்றும் ரஞ்சிக் கிண்ணப் போட்டிகள் முடிவடைந்தும் காணப்படுவதனால் அத்தொடர்களில் பிரகாசிக்கும் புதிய வீரர்களை இனங்காண்பதற்கும் துடுப்பாட்டத்தில் நல்ல திறனுடன் இருக்கும் வீரர்களை ஏலத்தில் எடுப்பதற்கும் உதவியாக இருக்கும்.

ஆனால் மேற்படி தொடர்கள் தற்போதும் நடைபெற்று வருவதனால் உள்ளூர் வீரர்களைத் தெரிவு செய்வதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது. அடுத்த வருட உலகக் கிண்ணத் தொடரைக் கருத்திற்கொண்டே ஐ.பி.எல். போட்டிகள் முன்னதாக நடைபெறவுள்ளது. இதனாலேயே வீரர்கள் ஏலத்தையும் முற்கூட்டி நடத்த வேண்டிய தேவை இருப்பதனால் ஐ.பி.எல். நிர்வாகத்தையும் இந்த விடயத்தில் குறைசொல்ல முடியாது.

# விருது

சர்வதேச மெய்வல்லுநர் சங்கங்களின் சம்மேளனம் இந்தாண்டுக்கான சிறந்த வீர, வீராங்கனைக்கான விருதுகளை வழங்கியுள்ளது. அந்தவகையில் பேர்லின் மரதன் ஓட்டப்போட்டியில் உலக சாதனை படைத்த கென்ய வீரரான எலியுட் கிப்சொக் சிறந்த வீராகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார். அதுபோல கொலம்பிய வீராங்கனையான கத்தரின் இபர்குவென் நீளம்பாய்தல் மற்றும் முப்பாய்ச்சல் போட்டிகளில் மத்திய அமெரிக்க மற்றும் கரீபியன் சம்பியனாகவும் டயமண்ட் லீக் பட்டத்தையும் வென்றதனால் சிறந்த வீராங்கனையாக அவர் தெரிவுசெய்யப்பட்டுள்ளார். இந்த விருதை இவ்விருவரும் பெறுவது இதுவே முதல் தடவை என்பதும் குறிப்பிடத்தக்கது.




# சத்திரசிகிச்சை



லாலிகா தொடரில் அத்லெட்டிகோ மட்ரிட் அணிக்காக விளையாடி வரும் ஸ்பெயின் வீரரான டியாகோ கோஸ்ராவுக்கு இடது பாதத்தில் ஏற்பட்டுள்ள உபாதை காரணமாக சிலவாரங்களாகவே அவதிப்பட்டு வந்துள்ளார். இந்நிலையில் இந்தவாரம் அவருக்கு பிறேசிலில் சத்திரசிகிச்சை மேற்கொள்ளப்படவுள்ளதாக அணியின் மருத்துவர் அறிவித்துள்ளார்.

இதனால் எதிர்வரும் பெப்ரவரி மாதம் வரை அவர் போட்டிகளில் விளையாட முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. தற்போது 15 போட்டிகளின் முடிவில் லாலிகா தொடரின் புள்ளிப்பட்டியில் மூன்றாமிடத்தில் உள்ள அத்லெட்ரிகோ அணிக்கும் முதலிடம் வகிக்கும் பார்சிலோனா அணிக்கும் இடையில் மூன்று புள்ளிகள் வித்தியாசமே உள்ள நிலையில் டியாகோ கோஸ்ராவின் விலகல் பெரும்பின்னடைவாகவே கருதப்படுகின்றது.

# பார்வையிட வசதி

இந்தியாவில் கிரிக்கெட் ஒரு மதமாகக் கொண்டாடப்பட்டாலும் ஹொக்கிப் போட்டிகளுக்கும் தனி மவுசு உண்டு. குறிப்பாக தற்போது உலகக் கிண்ண ஹொக்கிப் போட்டிகள் நடைபெற்று வரும் ஒடிசா மாநிலத்தில் உள்ள சண்டார் மாவட்டத்தில் இருந்து இந்திய ஹொக்கி அணிக்கு கடந்தகாலங்களில் 16 வீரர்கள் தெரிவாகியுள்ளதோடு தற்போதைய அணியிலும் அந்த மாவட்டத்தைச் சேர்ந்த பிரேந்திர லக்ரா மற்றும் அமித் றோகிதாஸ் ஆகிய வீரர்கள் விளையாடியும் வருகின்றார்கள்.



ஆனாலும் அந்த மாவட்டத்தில் பெரும்பாலும் மாலை 6.30 தொடக்கம் 7.30 மணி வரை மின்வெட்டு அமுலில் இருப்பது வழக்கம். ஆனாலும் கடந்த சனிக்கிழமை கனடா அணியுடனான போட்டி இரவு 7 மணிக்கு ஆரம்பமாகியதால் போட்டியை அம்மாவட்ட மக்கள் முழுமையாகப் பார்வையிடுவதற்காக மின்வெட்டை ஒரு மணித்தியாலம் முன்னதாக அமுல்படுத்தியுள்ளார்கள்.

# பங்கேற்பு



மகளிர் ரென்னிஸ் போட்டிகளில் அதிக கிராண்ட்ஸ்லாம் பட்டங்களை வென்ற சாதனைக்குரியவர் அவுஸ்ரேலிய முன்னாள் வீராங்கனையான மார்கரெற் கோர்ட். இவர் 24 கிராண்ட்ஸ்லாம் பட்டங்களை வென்றிருந்தார். இவருக்கு அடுத்தபடியாக அதிக கிராண்ட்ஸ்லாம் பட்டங்களை வென்றவர் அமெரிக்க வீராங்கையான சேரீனா வில்லியம்ஸ்.

தற்போது 23 கிராண்ட்ஸ்லாம் பட்டங்களை வென்றுள்ள சேரீனா வில்லியம்ஸ் 2017 ஆம் ஆண்டு அவுஸ்ரேலியன் ஓப்பன் தொடரை வென்றதற்குப் பின்னர் அவருக்கு குழந்தை பிறந்ததனால் சிறிது காலம் ஓய்வில் இருந்தார். ஆனாலும் இந்தச் சாதனையை முறியடிப்பதற்காக மீளவும் போட்டிகளுக்குத் திரும்பி இருந்தார். அந்த வகையில் இந்தவருடம் நடைபெற்ற விம்பிள்டன் மற்றும் அமெரிக்க ஓப்பன் தொடர்களில் இறுதிப் போட்டிக்கு முன்னேறிய போதிலும் அவரால் கிராண்ட்ஸ்லாம் பட்டங்களைக் கைப்பற்ற முடியவில்லை.

இந்நிலையில்தான் அடுத்தாண்டு ஜனவரியில் நடைபெறவுள்ள அவுஸ்ரேலிய ஓப்பன் தொடரில் பங்கு பற்ற முடிவெடுத்துள்ள சேரீனா அதற்கு முன்னோட்டமாக இம்மாதம் அபுதாபியில் நடைபெறவுள்ள கண்காட்சிப் போட்டியில் பங்குபற்றவுள்ளதாக அறிவித்துள்ளார்.

இந்தப் பத்திரிகை லக்ஷ்மி பிறின்டர்ஸ் (பிறைவேற்) நிறுவனத்தால் 15.12.2018 அன்று 107, இராச வீதி, கோப்பாய் - திருநெல்வேலி, யாழ்ப்பாணத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.